தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 215 18.03.2026 புதன்கிழமை
Chennai Volume: 01 Issue: 215 Wednesday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

புதன்கிழமை
(18-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-4
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தசி காலை 8.26 வரை
பிறகு அமாவாசை
நட்சத்திரம்:
பூரட்டாதி நாளை
விடியற்காலை 5.53 வரை
பிறகு உத்திரட்டாதி.
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-1.30 மணி.
எமகண்டம்
காலை 7.30-9.00 மணி.
சூலம் - வடக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-5 மணி

மேஷம் ...................... வரவு
ரிஷபம் ...................... ஆதரவு
மிதுனம் ...................... ஈகை
கடகம் ...................... பெருமை
சிம்மம் ...................... பரிசு
கன்னி ...................... உயர்வு
துலாம் ...................... ஆர்வம்
விருச்சிகம் ...................... கவனம்
தனுசு ...................... அமைதி
மகரம் ...................... நிறைவு
கும்பம் ...................... கடமை
மீனம் ...................... லாபம்

# சட்டசபை தேர்தலில் த.வெ.க. தனித்து போட்டி!

## நிர்வாகிகள் கூட்டத்தில் விஜய் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 18:**

தமிழக சட்டசபை தேர்தலில் புதிய வரவாக 2006-ம் தே.மு.தி.க., 2016-ம் ஆண்டு நாம் தமிழர் கட்சி இடம்பெற்றது. அந்த வரிசையில், 2026-ம் ஆண்டு நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் புதிதாக களம் இறங்குகிறது.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் ஒரு அணி, அ.தி.மு.க. தலைமையில் மற்றொரு அணி, நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், இயக்குனர் சீமானின் நாம் தமிழர் கட்சி தனித்து என போட்டியிட இருக்கிறது.

அதாவது, 4 முனைப்போட்டி நிலவும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், இந்த 4 முனைப்போட்டியை 3 முனைப்போட்டியாக மாற்றும் முயற்சிகள் நடைபெற்றன. அதாவது, அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் தமிழக வெற்றிக் கழகத்தை இணைக்கும் முயற்சிகள் திரை மறைவில் நடைபெற்றன. அப்போது, த.வெ.க.வுக்கு 60 தொகுதிகள், துணை முதல்-அமைச்சர் பதவி வழங்குவதாக பா.ஜ.க. தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால், த.வெ.க. தரப்பில், முதல் 2½ ஆண்டுகள் விஜய்தான் முதல்-அமைச்சர் என்று கோரிக்கை விடப்பட்டது. இதை பா.ஜ.க. ஏற்றாலும், அ.தி.மு.க. ஏற்கவில்லை. குறிப்பாக, தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்-அமைச்சர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி மறுத்துவிட்டார்.

இந்த நிலையில்தான் கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்தது தொடர்பாக டெல்லியில் நடைபெற்ற சி.பி.ஐ. விசாரணையில் கலந்துகொள்ள கடந்த 14-ந் தேதி இரவு நடிகர் விஜய் டெல்லி சென்றார். அவருடன் நிர்வாகிகள் ஆதவ் அர்ஜூனா, விஷ்ணு ரெட்டி ஆகியோரும் சென்றிருந்தனர்.

அன்று இரவே ஆதவ் ஆர்ஜூனா, விஷ்ணு ரெட்டி ஆகியோரை பா.ஜ.க. மேலிட தலைவர்கள் சந்தித்து பேசியுள்ளனர். அப்போது, நீங்கள் தனித்து போட்டியிட்டால் அது தி.மு.க. வெற்றியை எளிதாக்கிவிடும். தி.மு.க. தோற்க வேண்டும் என நினைத்தால் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு வாருங்கள் என்று கூறியுள்ளனர்.

**நடிகர் விஜய் பெரம்பூர் தொகுதியிலும், ஆதவ் அர்ஜூனா வில்லிவாக்கம் தொகுதியிலும், புஸ்சி ஆனந்த் தி.நகர் தொகுதியிலும் களம் இறங்குவார்கள் என்று கூறப்படுகிறது.**



அவர்கள் இருவரும் இந்தத் தகவலை விஜய்யிடம் கூறியிருக்கின்றனர். அவரும் கடந்த 2 நாட்களாக அமைதி காத்தார். இந்த நேரத்தில், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு த.வெ.க. வருமா, வராதா என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில், நேற்று மாலை பட்டினப்பாக்கத்தில் நடைபெற்ற த.வெ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய விஜய், சட்டசபை தேர்தலில் நாம் தனித்தே போட்டியிடப் போகிறோம். தொகுதிகளுக்கு சென்று களப்பணியாற்றுங்கள். வேட்பாளர் பட்டியல் விரைவில் அறிவிக்கப்படும். தமிழகம் முழுவதும் நானும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன். தேர்தலில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம். நம்பிக்கையோடு இருங்கள் என்று கூறியுள்ளார்.

த.வெ.க.வில் ஏற்கனவே 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 174 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. இந்தப் பணி நிறைவடைந்ததும், த.வெ.க.வின் தேர்தல் அறிக்கையும், வேட்பாளர்கள் பட்டியலும் ஒன்றாக அறிவிக்கப்பட இருக்கிறது. கட்சியின் முக்கிய நிர்வாகிகள் அனைவரும் சென்னையில் களம் இறங்க இருக்கின்றனர்.

குறிப்பாக, நடிகர் விஜய் பெரம்பூர் தொகுதியிலும், ஆதவ் அர்ஜூனா வில்லிவாக்கம் தொகுதியிலும், புஸ்சி ஆனந்த் தி.நகர் தொகுதியிலும் களம் இறங்குவார்கள் என்று கூறப்படுகிறது. இதேபோல், எழும்பூர் - ராஜ்மோகன், சைதாப்பேட்டை - அருள் பிரகாசம், மயிலாப்பூர் - வெங்கட்ராமன், ஆயிரம் விளக்கு - ஜெ.சி.டி.பிரபாகரன், ஆர்.கே.நகர் - மரிய வில்சன் ஆகியோரும் போட்டியிடுகின்றனர். ஏனைய தொகுதிகளில் கட்சியின் மாவட்ட செயலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது. அந்த வகையில், தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுவது உறுதியாகியுள்ளது. எதுமாதிரியும் இல்லாமல் புதுமாதிரியாக இந்த தேர்தல் இருக்கிறது. வெற்றி - தோல்வி என்பது குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே இருக்கும் என்பதால், தேர்தல் களம் இப்போதே பரபரக்க தொடங்கியிருக்கிறது.

## 'ஜனநாயகன்' மறுதணிக்கை



**சென்னை, மார்ச் 18:**

நேற்று 'ஜனநாயகன்' மறுதணிக்கை செய்யப்படவுள்ளது. விரைவில் தணிக்கை சான்றிதழுடன் வெளியீட்டு தேதி அறிவிக்கப்படும் என விநியோகஸ்தர்கள் ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

விஜய்யின் 'ஜனநாயகன்' படத்தின் மறுதணிக்கை இன்று பிற்பகல் நடைபெறுகிறது. இதன் முடிவினை எதிர்நோக்கி தயாரிப்பாளர் மட்டுமன்றி விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இந்த தணிக்கை முடிந்தவுடன், தணிக்கை சான்றிதழ் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது படக்குழு.

ஜனவரி 9-ம் தேதி வெளியாகவிருந்த படம் 'ஜனநாயகன்'. தணிக்கையில் ஏற்பட்ட பிரச்சினையால், தயாரிப்பு நிறுவனம் நீதிமன்றம் சென்றது. அங்கும் அப்பிரச்சினை முடிவடையவில்லை. தற்போது நீதிமன்றத்திடம் வழக்கை வாபஸ் பெற்று, மறுதணிக்கைக்கு விண்ணப்பித்தது தயாரிப்பு நிறுவனம். அந்த மறுதணிக்கையே இன்று சென்னையில் நடைபெறுகிறது. இன்று நல்ல முடிவு எட்டப்படும் எனத் தெரிகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டதால், தேர்தல் முடிந்தவுடன்தான் படம் வெளியாகும் என கூறப்படுகிறது. இந்த வதந்திகள் அனைத்துமே மறுதணிக்கை முடிந்தவுடன் முடிவுக்கு வரும் என்பது உறுதி.

கே.வி.என் நிறுவனம் தயாரிப்பில் 'ஜனநாயகன்', 'டாக்சிக்' ஆகிய படங்களின் வெளியீடு தள்ளிவைக்கப்பட்டுக் கொண்டே இருப்பதால், இந்நிறுவனம் கடும் சிக்கலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் மருத்துவமனை மீது பாகிஸ்தான் தாக்குதல்: 400 பேர் பலி

**காபூல், மார்ச் 18:**

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் ஏறத்தாழ 400 பேர் உயிரிழந்ததாக தலிபான் அரசு தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் சுமார் 250 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் திங்கட்கிழமை (மார்ச் 16) இரவு நடந்ததாக ஆப்கன் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹம்துல்லா ஃபித்ரத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து தீயை அணைக்கும் பணியிலும், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியிலும் பல்வேறு குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில், மக்கள் அதிகம் இருக்கும் இடத்தில் தாக்குதல் மேற்கொள்ளவில்லை என பாகிஸ்தான் மறுத்துள்ளது. காபூல் மற்றும் ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் தங்கள் தரப்பில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் மருத்துவமனையில் போதைப் பொருள் பயன்படுத்துபவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்துள்ளது. இதை ஆப்கானிஸ்தான் சுகாதார துறையின் செய்தித் தொடர்பாளர் ஷராபத் ஸமான் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் மருத்துவமனை கட்டிடம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என அவர் கூறியிருந்தார்.


ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையிலான மோதல் பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகிற சூழலில், அண்மைய காலமாக எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக இருதரப்புக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இரு தரப்புக்கும் இடையிலான மோதல் தொடங்கி மூன்று வார காலம் ஆகியுள்ளது. மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு முன்பாக இரு தரப்பிலும் எல்லையோர பகுதியில் மாறி மாறி தாக்குதல் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதவ் அர்ஜுனா பேச்சுக்கு, நடிகர் ரஜினிகாந்த் பதில்

**சென்னை, மார்ச் 18:**

திமுக கொடுத்த பயத்தால், நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவில்லை என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா அண்மையில் கூறியிருந்தார்.



அவரின் இத்தகையப் பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில், ஆதவ் அர்ஜுனாவின் பேச்சுக்கு பதலளிக்கும் வகையில், ரஜினிகாந்த் அறிக்கையொன்றை தன்னுடைய சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்திருப்பதாவது:

"தவெக கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா சமீபத்தில் என்னைப் பற்றி உண்மைக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அவருடைய அவதூறுக் கருத்தைக் கண்டித்து, எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் ரகுபதி, தொல்.திருமாவளவன், எஸ்.பி.வேலுமணி, நண்பர் அண்ணாமலை, அர்ஜுனமூர்த்தி, அன்புமணி ராமதாஸ், ஜி.கே. வாசன், ஜான் பாண்டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி. தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள், மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத்துறையினர், என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகப்பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்'" என்று குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. ஆட்சியில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு கிடையாது - இ.பி.எஸ். தாக்கு

**சென்னை, மார்ச் 18:**

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தி.மு.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பாலியல் வன்கொடுமை, போதைப்பொருட்கள் புழக்கம், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட விவகாரங்களுக்கு எதிராக கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:




* தமிழகத்தில் வீட்டு வரி 100 சதவீதம் அளவுக்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது.

* மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தும் அரசு தி.மு.க. அரசு.

* கட்டடத்திற்கான கம்பி டன்னுக்கு ரூ.60 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

* தி.மு.க. ஆட்சியில் வீடுகளுக்கான மின் கட்டணம் பன் மடங்கு அதிகரித்து இருக்கிறது.

* தி.மு.க. ஆட்சியில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு கிடையாது.

* தி.மு.க அளித்த 525 வாக்குறுதிகளில் 4ல் 1 பங்கை கூட நிறைவேற்றவில்லை.

* வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் அரசு ஊழியர்கள் வீதிகளுக்கு வந்து போராடினர்.

* இவ்வளவு பிரச்சனைகளுக்கும் காரணம் சட்டம் ஒழுங்கு டிஜிபி நியமிக்கப்படாதது தான்.

* வருகிற தேர்தலில் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

Follow our WhatsApp Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# 15ம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேக மற்றும் லட்சார்ச்சனை திருப்பாவாடை மகோற்சவம் விழா



**தஞ்சாவூர், மார்ச் 18:**

தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் வருகிற (23.03.2026) திங்கட்கிழமை அன்று ஸம்வத்ஸராபிஷேக மற்றும் லட்சார்ச்சனை திருப்பாவாடை மகோற்சவம் விழா சிறப்பாக நடைபெற்ற உள்ளது. அனைவரும் வருக! எம்பொருமான் அருள் பெறுக!! நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், நித்ய பூஜை கைங்கர்ய & லட்சார்ச்சனை குழு மற்றும் உபயதார்கள் செய்து வருகின்றனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

# அதிமுக ஆர்ப்பாட்டத்தில் மயங்கிய முன்னாள் எம்எல்ஏவால் பரபரப்பு!



**திருவள்ளூர் ,மார்ச் 18:**

போதைபொருள்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தவறிய திமுக அரசைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை (நேற்று) அதிமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது முன்னாள் எம்.எல்.ஏ பலராமன் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி சாலை முன்பு ஒருங்கிணைந்த மாவட்ட அதிமுக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய மாவட்டச் செயலாளரும் முன்னால் அமைச்சருமான பா. பென்ஜமின் தலைமை வகித்தார். இதில் மாவட்டச் செயலாளர்கள் பி. வி. ரமணா (மேற்கு), மாதவரம் வி. மூர்த்தி (கிழக்கு), சிறுனியம் பலராமன் (வடக்கு), வி. அலெக்ஸாண்டர் (தெற்கு) ஆகியோர் தலைமை வகித்தனர்.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் மற்றும் போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தவறிய திமுக அரசைக் கண்டித்து அதிமுக கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, வெயில் காரணமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வடக்கு மாவட்டச் செயலாளரும், பொன்னேரி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான சிறுணியம் பலராமன் மேடையில் திடீரென மயங்கினார்.

அப்போது அருகில் இருந்தவர்கள் அவரை பாதுகாப்பாகத் தூக்கிச் சென்றனர். அதைத்தொடர்ந்து ஆசுவாசப்படுத்தி காரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# தி.மு.க.வுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது: தமிழிசை சவுந்தரராஜன்

**தூத்துக்குடி, மார்ச் 18:**

சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையம் வருகைதந்த பா.ஜ.க.மூத்ததலைவர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு பாரதிய ஜனதா கட்சியினர் வரவேற்பு அளித்தனர். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

மனதிற்கு மிகுந்த வேதனை அளிக்க கூடிய ஒரு சம்பவமாக விளாத்திகுளத்தில் மாணவி கொலை செய்யப்பட்டுள்ளார். இது மட்டுமல்ல தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பாகஇல்லை என்பதை கண்டிப்பதற்காகவும், பெண்ணினத்தை பாதுகாப்பு கொடுப்பதற்கு நாங்கள் இருக்கிறோம் என்பதை சொல்வதற்காக நான் வந்துள்ளேன்.

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளாக விளம்பர ஆட்சி தான் நடந்து வருகிறது. எவ்வளவு பிரச்சனை நடந்து வருகிற போதும் முதலமைச்சர் ரீல்ஸ் போட்டுக் கொண்டிருக்கிறார். கடந்த 5 வருடங்களாக, தேர்ந் தெடுக்கப்பட்ட முதலமைச்சர் இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்வதில்லை. 4 ஆயிரம் குடமுழுக்கு நடத்தி உள்ளதாக சொல்கின்றனர். ஒரு குடமுழுக்கு விழாவிலும் முதலமைச்சர் கலந்து கொள்ளவில்லை.

நேற்று இஸ்லாமிய இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது தமிழின் அடையாளத்தை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் எல்லாம் சேர்ந்து பாதுகாக்க வேண்டும் என்று சொல்கிறார். பாகுபாடின்றி எல்லோருக்கும்



வாழ்த்து தெரிவிப்பது தான் தமிழின் அடையாளம். தமிழின் அடையாளம் வந்தாரை வரவேற்பது தான் தமிழகத்தின் அடையாளம்.

தமிழின் அடையாளத்தை தி.மு.க. தொலைத்து வைத்து கொண்டிருக்கிறது. தமிழின் அடையாளத்தை மீட்பது தான் எங்கள் நோக்கம்.

அ.தி.மு.க., பா.ஜ.க, இயல்பாக கூட்டணி அமைந்துள்ளது. இந்த கூட்டணி பலமாக இருக்கிறது.

எங்களை பொறுத்தமட்டில் யாருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டியது இல்லை. இந்த கூட்டணியில் தி.மு.க,வை யாரெல்லாம் தோற்கடிக்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்களை கூட்டணியில் நாங்கள் சேர்ந்து இருக்கிறோம்.

அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி பலமாக இருக்கிறது. மோசமான ஆட்சி நடத்துகின்ற தி.மு.க.வுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது.

தமிழுக்கும், தமிழ்நாட்டை காப்பதற்காகவும் தான் நாங்கள் கூட்டணி அமைத்துள்ளோம்.

தி.மு.க. ஆட்சியில் 11 அமைச்சர்கள் மீது லஞ்ச குற்றசாட்டு உள்ளது. பெண்கள் பாதுகாப்பாக செல்ல முடியவில்லை, கஞ்சா புழக்கம் பரவலாக உள்ளது.

அறிவாலயத்தின் அருகில் நிழலுக்கு ஒதுங்குபவர்களை கூட கூட்டணிக்கு அழைத்து தி.மு.க.வினர் சேர்க்கின்றனர்.

தி.மு.க.வினர் தோல்வி முகத்தில் இருக்கிறார்கள், பதற்றத்தில் இருக்கிறார்கள். நாங்கள் வெற்றி முகத்தில் இருக்கிறோம், நாங்கள் மக்களுக்காக கூட்டணி அமைத்திருக்கிறோம். தமிழ் மக்களுக்காக கூட்டணி அமைத்திருக்கிறோம்.

கடந்த 10 ஆண்டுகளில் பாரத பிரதமர் 45 முறை தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார். மன்மோகன் சிங் 15 முறை தான் வந்திருக்கிறார். ஒவ்வொரு முறை வரும்போதும் அரசாங்கத்தின் சார்பில் தமிழகத்தில் நல்ல திட்டங்களை சமர்ப்பிக்க தான் வந்துள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக தேர்தல்: 2 நாள்களில் ரூ. 23 கோடி பணம், பரிசுப் பொருள்கள் பறிமுதல்!

**சென்னை, மார்ச் 18:**


தமிழ்நாட்டில்தேர்தல்நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை ரூ. 23 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பரிசு பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் வருகிற ஏப்ரல் 23-ஆம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறும் என தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கடந்த மார்ச் 15 ஆம் தேதி அறிவித்தார். மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடைபெறும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வருவதாகவும் கூறினார்.

இந்நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டு சரியாக 2 நாள்களில் ரூ. 23 கோடி பணம் மற்றும் பரிசுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேர்தல் களத்தில் போட்டியிடும் அரசியல் கட்சியினைச் சார்ந்த வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சமமான சூழலை உருவாக்கித் தர வேண்டும் என்ற நோக்கில்



வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு வருகிறது.

ஒரு வேட்பாளர் சட்டசபை தேர்தலின்போது அதிகபட்சம் ரூபாய் 40 லட்சம் வரை மட்டுமே தேர்தல் சம்பந்தமான பணிகளுக்காக செலவினம் மேற்கொள்ள இயலும்.

வேட்பாளரின் தேர்தல் செலவினங்களைக் கண்காணிப்பதற்காக, பல்வேறு தேர்தல் செலவின கண்காணிப்பு குழுக்கள் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரமாக கண்காணித்திட 234 சட்டமன்ற தொகுதிகளிலும் பறக்கும் படை / நிலை கண்காணிப்பு குழுக்கள் மட்டுமில்லாமல் 25 துறை சார்ந்த கண்காணிப்பு குழுக்களும் இடம் பெற்றுள்ளன. இதில் வருமானவரித் துறை, அமலாக்கத் துறை. சுங்கத் துறை உள்ளிட்ட துறைகளும் அடங்கும்.

தற்போது 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு தலா 9 பறக்கும் படைகள், 9 நிலை கண்காணிப்பு குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுவதும் 2160 பறக்கும் படைகள், 2160 நிலை கண்காணிப்பு குழுக்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இக்கண்காணிப்பு குழுக்கள் மூலம் இன்றுவரை (17/03/2026) ரூபாய் 23.28 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பொருள்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை நிலையில் உள்ளன.

பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட தேர்தல் நடத்தை விதிகள் அனைத்தும் அனைத்து தரப்பினராலும் முறையாக பின்பற்றப்படுகிறதா என்று மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.

# பங்குனி மாதம் தேய்பிறை பிரதோஷ வழிபாடு






**திருவண்ணாமலை, மார்ச்18:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்துார் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் பங்குனி மாதம் தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,இளநீர்,தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது. நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# சாலையோர மரங்களுக்கு தண்ணீர் ஊற்றும் நிகழ்ச்சி





வாடிய மரங்களுக்கு தண்ணீர் ஊற்றும் விதமாக மதுரை யானைமலை கிரீன் பவுண்டேஷன் சார்பாக மதுரை உத்தங்குடி முதல் ஒத்தக்கடை வரை சாலையோர மரங்களுக்கு தண்ணீர் ஊற்றும் நிகழ்ச்சி மதுரை சக்கி மங்கலம் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் திரு தென்னவன் அவர்கள் தலைமை நடைபெற்றது. ஆலோசகர் பிரபு, தமிழ் ஆசிரியர் கார்த்திக், சமூக ஆர்வலர் மதுரை ஓகே சிவா, சமூக சேவகர் களும் மற்றும் பள்ளி குழந்தைகளும், பெண்களும் கலந்து கொண்டனர்.

## வாடிப்பட்டியில்

# விஷ்வ பாரதி வித்யா மந்திர் ஆங்கிலப்பள்ளி ஆண்டு விழா



**வாடிப்பட்டி, மார்ச்.18:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே தாதம்பட்டி மேட்டுப் பெருமாள் நகர் விஷ்வபாரதி வித்யா மந்திர் பிரைமரி மற்றும் நர்சரி பள்ளி 29 ஆவது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் நடந்தது.

இந்த விழாவிற்கு பள்ளி முதல்வர் எஸ்.எஸ். குபேந்திரன் தலைமை தாங்கினார். துணைத் தாளாளர் சுதா முன்னிலை வகித்தார். ஆசிரியர்கள் மீனா சத்யா ஆண்டறிக்கை வாசித்தனர். மாணவி கீர்த்திகா தேவி வரவேற்றார்.

இந்த விழாவில் இதே பள்ளியில் படித்து தற்போது நீதித்துறையில் பணியாற்றி வரும் மாணவரான திருமூர்த்தி பரிசுகள் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- இந்தபள்ளியில் நான் கல்வி கற்று இன்று உயர்வான இடத்தில் உள்ளேன் என்றால் அதற்கு முழு காரணம் ஆசிரியர்களே. மாணவர்கள் ஆசிரியர்களின் அறிவுரைப்படி நடந்து நன்றாக படித்து வாழ்வில் வெற்றி அடைய வேண்டும். மாணவ பருவத்தில் செல்போன் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் அறிவுரை கேட்டு ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றி வரும் மாணவரான நவநீத கோகுல் கலந்து கொண்டு தேர்வில் அதிக அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர். இந்த விழாவில் மாணவ மாணவிகளின் மாறுவேட போட்டி, நடனம், விழிப்பு ணர்வு நாடகங்கள், கலை நிகழ்ச்சி கள் நடந்தது. இதில் ஏராளமான பெற் றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் காயத்திரி நன்றி கூறினார்.

# பாமக வழக்கு: ராமதாஸுக்கு பின்னடைவு! தேர்தல் முடிந்தபிறகே விசாரணை!

**சென்னை, மார்ச் 18:**

பாமக பெயர், சின்னம் மற்றும் கொடி ஆகியவற்றை பயன்படுத்த அன்புமணி உள்ளிட்டோருக்கு தடை விதிக்கக் கோரி அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி டி.வி. தமிழ்செல்வி இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார். இந்த தடையை நீக்கக் கோரி ராமதாஸ் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி டி.வி. தமிழ்செல்வி முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது ராமதாஸ் தரப்பில், இந்த வழக்கில் தங்களது தரப்பு



வாதத்தைக் கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்கக்கூடாது எனக் கூறி கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அதை கருத்தில் கொள்ளாமல் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, தேர்தல் தேதி தற்போது அறிவிக்கப்பட்டு விட்டது. தந்தை - மகன் இடையிலான பிரச்னை நாளைக்கே சரியாகிவிடும். எனவே, கட்சியை கருத்தில் கொண்டே இந்த வழக்கில் முடிவெடுக்க முடியும். உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில், கட்சியின் பொதுச் செயலரான வடிவேல் ராவணனை எதிர்மனுதாரராக சேர்ப்பதில் என்ன பிரச்னை உள்ளது? என கேள்வி எழுப்பினார். பின்னர், இந்த வழக்கை செவ்வாய்க்கிழமைக்கு நீதிபதி ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

அதன்படி நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த வழக்கு மீண்டும் நீதிபதி டி.வி.தமிழ்செல்வி முன்பு விசாரணைக்கு வந்தது.

வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று ராமதாஸ் தரப்பு கோரிக்கை வாய்த்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத்தடையை மே 10 ஆம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும்,"தேர்தல் அறிவிக்கப் பட்டு விட்டது. இப்போது எந்த உத்தரவு பிறப்பித்தாலும் அது தேர்தல் நடைமுறைக்கு இடையூறாகிவிடும். அதனால் தற்போது எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. தேர்தல் முடிந்து மே 10 அன்று இதுதொடர்பான அனைத்து மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்று கூறி வழக்கை ஒத்திவைத்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு ராமதாஸ் தரப்புக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே அன்புமணி, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்துள்ளார். ராமதாஸ் இன்னும் தனது கூட்டணி முடிவை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.













## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

♦ Flexible timing unlimited incentive

♦ No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780







ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901










## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!



நெஞ்சின் ஒவ்வொரு
துடிப்பிலும்
உன் நினைவுகள்
சுருதியாகி வாழ்கின்றன

காதல் என்பது ஒரு மலர்
அதன் மணம் என்றும்
மறையாது

என் இதயத்தில் நீயே
இருக்கின்றாய்
எனக்கு உன்னுடைய

பார்வையில் மட்டும்
உலகம் ஓயாமல் நகர்கிறது

என்னுடைய உலகம்
உன்னில் ஆரம்பிக்கும்
உன்னுடன் முடிகிறது

காதல் என்பது
எட்ட முடியாத விரல்
அது உன் அருகில்
என்னை தொட்டது

# வாழ்க்கை தத்துவம்...



சிரிப்பை இயல்பாக்கி
கொள்ளுங்கள் மனதில்
கவலை இருப்பினும்
அகம் போல முகமும்
அழகு பெறும்

எதையும் மனம் விட்டு
பேசாத வரை எல்லாம்
மன அழுத்தமே

தேடிப் போகாதே
அலட்சியப்படுத்தப் படுவாய்
எதிர்பார்க்காதே
ஏமாற்றப் படுவாய்

நிரூபித்து கொண்டே
இருப்பதை விட பேசாமல்
இருப்பது நல்லது

# கலப்பை

அதிகாலை ஆறு மணி காலைக்கடனை முடிப்பதற்காக சுடுகாட்டு பக்கம் ஒதுங்கலாமென்று வீட்டை விட்டு வெளியேறினார் மூர்த்தி... வயல்வெளிகளை மூடிக்கிடந்த பனிமூட்டங்களை பார்த்தவாறு தனது வயலை வந்தடைந்தார் ... வெல்லாமை பொய்த்துப்போக பாலம் பாலமாய் வெடிப்புகளோடு தனது நிலம் தன்னைப் பார்த்து ஏளமாய் சிரிப்பது போல் இருந்தது மூர்த்திக்கு.

கொஞ்ச காலம் முன்பு வரைக்கும் இந்த வயல்தான் அவருக்கு கஞ்சி ஊற்றிக் கொண்டிருந்தது... கீழத்தெருவை சேர்ந்த பத்துவீட்டுக்காரங்க நிலம் தான் அங்கே இருந்தது இவர்கள் நிலங்களை சுற்றிலும் பெரிய வீட்டுக்காரர்களின் நிலங்கள் சூழ்ந்துகொண்டிருந்தன. ஒரு காலத்தில் ஏகபோகமாய் இருந்த மூர்த்தியின் நிலங்கள், கடன்கப்பு என்று வந்து சேர... கொஞ்சம் கொஞ்சமாய் பெரிய வீட்டுக்காரர்களுக்கு சொத்தமாகிப் போனது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை அந்த ஏரியாவில் கிணற்று வயல்வெளி தோட்டம் என்று சொன்னால் அது பெரிய வீட்டுக்காரர்களுடையது மட்டும்தான். மூர்த்தியின் தம்பி ராகவன் தான் ஒரு நாள் சொன்னான்."அண்ணே எப்படியாவது கடனஉடன பட்டாவது நம்ம வயல்ல ஒரு கிணறு தோண்டி ஆகணும்" என்று...."டேய் ராகவா ஏற்கனவே நம்ம கிட்ட இருக்குற கொஞ்ச நஞ்ச நிலபுலத்த எப்படா புடுங்கலாம்னு... பெரிய வீட்டுக்காரங்க காத்துக்கிடக்காங்க, இதுல அவங்களுக்கு போட்டியா கிணறு வேற தோன்றிட்டோம்னு சொன்னா நம்மள ஊருக்குள்ள வைக்கவே மாட்டாங்க பாத்துக்கோ" என்று ராகவனின் முயற்சியை தடுத்தார் மூர்த்தி. "இல்லண்ணே எத்தனை காலத்துக்குத்தான் இவங்களுக்கு பயந்துகிட்டு கிடக்கிறது, நாமும் ஒரு கிணறு வெட்டி பம்பு செட்டு வெச்சோம்னா முப்போகமும் வெல்லாமை செய்யலாமில்ல...? நீ என்ன சொன்னாலும் சரி நான் செய்யத்தான் போறேன் நம்ம கீழத் தெருவில் இருக்கிற என்னோட கூட்டாளிங்களும் இதுக்கு உடன்படுவாங்கன்னு நினைக்கிறேன் நீ ஒன்னும் கவலைப்படாதே, எது வந்தாலும் நான் பாத்துக்கிறேன்" என்று தைரியமூட்டினான் ராகவன்... இள இரத்தங்கள் ஒன்று சேர்த்து ஒரு கிணறையும் வெட்டி பம்பு செட்டும் போட்டாச்சு, பெரிய வீட்டுக்காரங்க நிலத்துக்கு நடுவுல இருக்கிற கீழத்தெரு பத்து வீட்டு நிலமும் இந்த கிணற்று தண்ணீரில் பயனடைந்தது. வெள்ளாமையும் அவர்கள் நினைத்தபடி ஏகபோகமாய் இருந்தது.

தெருவில் வரும்போதும் போகும்போதும் பெரிய வீட்டுக்காரங்களோட வீட்டை கடக்கும் போதும் மூர்த்தியின் முகத்துக்கு நேராகவே பெரியவீட்டுக்காரர்கள் சாடை மாடையாக பேசிக் கொண்டிருந்தார்கள். "வீட்டுக்கு பின்னாடி வந்து நின்னு வாங்கி தின்ன பயலுவயெல்லாம் சொந்தமா கிணறு வெட்டி வெல்லாம பண்ண ஆரம்பிச்சிட்டானுங்க... இனி நம்ம சொல்லுறத அவனுங்க கேட்டு நடப்பார்களா...? இடுப்புல இருந்த துண்டை ... தோளில் போட்டுக்கிட்டு நாட்டாமை பண்ண ஆரம்பிச்சிட்டானுங்க" என்று பெரிய வீட்டுக்காரர்கள் அத்தனை பேரும் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள் ஏற்கனவே இந்த ஏரியாவில் பெருசு சிறுசு என்கிற ஏகபோக மனப்பான்மை பெருகி கிடந்தது. இன்று ராகவன் கிணறு வெட்டுகிற ஒரு வேலையை செய்ததால்... அது பூதாகாரமாக வெடித்து கொண்டிருப்பதை உணர முடிந்தது மூர்த்திக்கு.

அதன் விளைவாகவே பெரிய வீட்டுக்காரர் அவர்களின் நிலத்தில் ஒரு பகுதியில் ஏதோ தண்ணீர் பேக்டரி வரப்போகிறது என்று சொன்னார்கள் எத்தனையோ போராட்டங்கள்... கூச்சல்கள் குழப்பல்கள் ... என்று நடந்து கொண்டிருந்தாலும் பேக்டரி வேலையும் ஒரு பக்கம் நடந்து கொண்டே இருந்தது ஏழைகளின் சொல் அம்பலமேறவில்லை அரசாங்கமும் பெரிய வீட்டுக்காரர்களுக்குத்தான் ஒத்து போனது.

விவசாயம் பொய்த்து போன நிலங்களை பார்த்து பார்த்து கண்ணீர் விட்டுக் கொண்டிருக்காமல் ராகவன் தனக்கு கிடைத்த சிறு சிறு வேலைகளுக்கு செல்லத்தொடங்கினான். வயிற்றுப் பாடு என்பது அன்றாடம் வருகின்ற சொற்ப வருமானத்தில்தான் கடந்து கொண்டிருந்தது. மாடு ஆடு கோழி குஞ்சு என களைகட்டி இருந்த வீடு இன்று கொல்லைப்புறத்தில் இரண்டு மாடுகள் மட்டும் தான் இருந்தன ஒரு சில ஆடுகளும் கூட ...தன் மகனுடைய கடைசி கால கல்லூரி படிப்பை முடிப்பதற்கு பொருளாதாரமும் இல்லாமல் கணேசனின் கடைசி இறுதி கல்லூரி படிப்பென்பது அவனுடைய தாய் செல்லம்மாலின் தாலியை விற்றுத்தான் படிப்பை முடிக்க வேண்டிஇருந்தது. கல்லூரி படிப்பை முடித்துவிட்டு மகன் கணேசன் ஏதேனும் ஒரு நல்ல வேலைக்கு சென்று அமர்வான் என்று காத்திருந்தான் ராகவன். வருட கணக்கில் மழை தண்ணீர் பாராமல் இருந்த அந்த பூமி நேற்று அந்தியில் பிடித்த மழை , இன்று விடிந்தும் விடாமல் பெய்து கொண்டிருந்தது சனியில் மழை பிடித்தால் அடுத்த சனியில்தான் பெய்வதை நிறுத்தும் என்பார்கள். அதுபோலத்தானோ என்னவோ இன்றும் இப்படி பெய்துகொண்டிருக்கிறது மழை. கணேசன் படிப்பை முடித்துக் கொண்டு சென்னையில் இருந்து இன்று காலையில் வந்து விடுவதாக இரண்டு நாட்களுக்கு முன்பே போன்செய்து சொல்லி விட்டான். பல்வேறு கம்பெனிகளின் கேம்பஸ் இன்டர்வியூவில் பங்கு கொண்டு, பல கம்பெனிகள் தன்னை வேலைக்கு அழைத்து இருப்பதாகவும் கூறினான் கணேசன்... ராகவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியாய் இருந்தது. மகன் கணேசன் நல்ல ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்து தன்னுடைய கஷ்டங்களை யெல்லாம் போக்கிவிடுவான் என்று நம்பி கொண்டிருந்தான் ராகவன்.

இன்று உழைப்பாளர் தினம் என்பதால் கொடி மரத்தையும் கொடியையும் தயார்படுத்தியாக வேண்டும்... சற்று நேரத்திற்க்கெல்லாம் கட்சி தோழர்கள் அனைவரும் வந்து விடுவார்கள்... மழை வேறு பிசுபிசுவென்று தூரி கொண்டிருந்தது. ராகவன் இதையெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கும்போதே கணேசன் வந்துவிட்டான்."அப்பா நான் வரும்போது நம்ம வயலை தாண்டித்தான் வந்தேன் வயலெல்லாம் நல்லா ஈரம் கட்டி இருக்கு இப்போ உழுந்தம்னா ரொம்ப பக்குவமா இருக்கும்"என்று ஆவலாய் கூறினான் கணேசன்.

"டேய் தம்பி இன்னைக்கு பேஞ்ச மழையை நம்பி ஏதாவது பண்ணுனோம்னா நாளைக்கே வெயிலுபல்ல இலிச்சுக்கிட்டு அடிக்கும் அப்புறம் உரத்துக்கும் பத்தாம விதைக்கும் பத்தாம முழிச்சுகிட்டு நாம தானே நிக்கணும் அதனால கொஞ்சம் பொறுமையா முடிவெடுக்கலாம் கம்முனு இருடா... இப்பதானே சென்னையிலிருந்து வந்திருக்கிறே, முதல்ல சாப்பிடு ரெஸ்ட் எடு அப்புறம் பேசிக்கலாம்..."

தந்தை ராகவனுடைய வழிகாட்டலும் பெரியப்பா மூர்த்தியின் அனுபவமும் கணேசனை விவசாயத்தில் இந்த அளவுக்கு கொண்டு வந்து இருந்தது. படித்துப்பட்டம் வாங்கி வேறு ஒரு நல்ல வேளையில் சென்று அமர்வான் மகன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராகவனுக்கு, மகனின் இந்த சமயோசித புத்தியையும் விவசாயத்தின் மீது இருக்கின்ற ஆர்வத்தையும் கண்டு மலைத்துப் போயிருந்தான். "தம்பி கணேசா உனக்கு எப்படி டா இந்த விவசாயத்தின் மீது இப்படி ஒரு பற்றும் பாசமும் வந்தது"என்று கணேசனைப் பார்த்து ஆச்சரியமாய் கேட்டான் ராகவன். "அப்பா படிச்சு முடிச்ச எல்லோரும் கலெக்டர் வேலைக்குத்தான் போகணும்னு சொன்னா, திங்கிற சோத்துக்கு யாருப்பா வேலை செய்கிறது..? அதனாலதான் நான் முடிவு செய்தேன் இந்த விவசாயத்தை இதே கிராமத்திற்குள் எல்லோருக்கும் முன்னாடி நன்றாக செய்து ஜெயித்து காட்டணும் என்று முடிவு செய்தேன் அதான் பா..." என்றான் கணேசன்.

நெகிழ்ந்து போனான் ராகவன். அப்போதுதான் வயலில் உழுது முடித்து வீட்டுக்கு வந்திருந்த ஏர் கலப்பையை, ஆறத் தழுவியபடிஆனந்த கண்ணீரோடு கணேசனை பார்த்தபடி நின்றிருந்தார் மூர்த்தி.

**முத்தையா மோகன்**
கோயம்புத்தூர் 18.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஒரு பையன் மழையில நினைஞ்ச பிறகு அவன் தலை வீங்கி இருந்துச்சாம் ஏன்.?*

*விடை: ஏன்னா அவன் கொட்டுற மழையில நினைஞ்சிட்டானாம்.*



*நாம் எதுக்கு குளிச்ச பிறகு ஏன் தலைய துவட்டுறோம்.?*

*விடை: குளிக்கும் போதே துவட்ட முடியாதுல அதான்.*

# தினம் ஒரு சமையல்



## உடைத்து ஊற்றிய முட்டை

**தேவையான பொருட்கள்:**



| | |
|---|---|
| முட்டை | -5 |
| தக்காளி | -5 |
| தேங்காய் | -½ மூடி |
| பெருங்காயம் | -½ தேக்கரண்டி |
| சின்ன வெங்காயம் | -20 |
| பச்சை மிளகாய் | -3 |
| பல் பூண்டு | -10 |
| கருவேப்பிலை | -2 கொத்து |
| கொத்தமல்லி | -சிறிதளவு |
| கடுகு | -1 தேக்கரண்டி |
| சீரகம் | -1 தேக்கரண்டி |
| வெந்தயம் | -½ தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | -½ தேக்கரண்டி |
| மிளகாய் தூள் | -1 தேக்கரண்டி |
| மல்லி தூள் | -2 தேக்கரண்டி |
| சாம்பார் தூள் | -1 மேஜைக்கரண்டி |
| எண்ணெய் | -100 மில்லி |
| உப்பு | |

**செய்முறை:**

முதலில் சிறிய வெங்காயம், தக்காளி,தேங்காய் இவை அனைத்தும் நறுக்கி கொள்ளவும்.

பின்பு ஒரு மிக்சி ஜாரில் தேங்காய்,மஞ்சள் தூள்,மிளகாய் தூள், சம்பார் தூள் இவை அனைத்தும் சேர்த்து நன்றாக அரைத்து எடுக்கவும்.

ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் கடுகு உளுத்தம்பருப்பு கடலைப்பருப்பு,வெந்தயம்,சீரகம்,10 பல் பூண்டு,பெருங்காயம், கருவேப்பிலை, வெங்காயம் சேர்த்து நன்றாக வதக்கவும்.

பின்பு வெட்டி வைத்த தக்காளி யும் சேர்த்து நன்றாக வதக்கவும் பின்பு சிறிதளவு தண்ணீர் ஊற்றி நன்றாக வேக வைக்கவும்

பின்பு அரைத்த விழுதை சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி 10 நிமிடம் கொதிக்க விடவும்.

பின்பு நன்றாக கொதி வந்ததும் அடுப்பை குறைத்து விட்டு முட்டையை உடைத்து ஊற்றவும்

பின்பு 5 நிமிடம் குறைவான தீயில் வைத்து முட்டை வெந்தவுடன் கொத்தமல்லி தூவி இறக்கவும்.

# வாதமடக்கி பயன்கள்



வாதநாராயணன் இலைகள், கைப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டவை. இவை, வாத நோய்களைக் குணமாக்கும்; பித்த நீரை அதிகரிக்கும்; நாடி நடையைப் பலப்படுத்தும்; உடல் வெப்பத்தை அதிகரிக்கும். மேலும், வீக்கத்தைக் கரைக்கும். அதிகமாக உட்கொண்டால் கழிச்சலுண்டாக்கும்.

இது வெளிர் மஞ்சள் நிறமான கட்டைகளைக் கொண்ட மென்மையான மரம். இலையுதிர்க்கும் வகையைச் சார்ந்தது. 12 மீ. வரை உயரமானவை. இரு சிறகாகப் பிரிந்த சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலைகளையும், உச்சியில், பெரிய பகட்டான, வெள்ளை மற்றும் மஞ்சளான பூக்களையும், தட்டையான, ½ அடி வரை நீண்ட காய்களையும் கொண்டது. ஒரு காயில் 10 விதைகள் வரை காணப்படும்.

ஆதிநாராயணன், வாதரசு, வாதமடக்கி போன்ற பெயர்களாலும் இது குறிப்பிடப்படுகின்றது. தமிழகமெங்கும், கிராமங்களில், வேலிகளில், சாலையோரங்களில் வளர்க்கப்படுகின்றது. புகைவண்டிப் பாதையோரங்களிலும் இவை பரவலாகக் காணப்படும். இலை, பட்டை ஆகியவை மருத்துவப் பயன் மிகுந்தவை.

வாதவலி, வீக்கம், கட்டிகள் குணமாக வாதநாராயணன் இலையைச் சமைத்துச் சாப்பிட வேண்டும். வாரம் இரண்டு முறைகள் இவ்வாறு பயன்படுத்தலாம். மேலும், இலையை ஆமணக்கு எண்ணெய் விட்டு வதக்கி, வீக்கம், கட்டிகள் மேல் ஒற்றடமிட வேண்டும்.

கை, கால் குடைச்சல், வலி குணமாக வாதநாராயணன் இலைச்சாறு ஒரு தேக்கரண்டி, தினமும் காலையில் மட்டும் குடித்துவர வேண்டும்.

# தன் ஜாதி பெயரை கூறி பெருமையாக பேசிய நடிகர் பார்த்திபன்.. ட்ரோல் செய்யும் நெட்டிசன்கள்



தமிழ் சினிமாவில் முக்கிய நடிகர், இயக்குனராக வலம் வருபவர் ஆர். பார்த்திபன். சமீபத்தில் அவர் நடிகை த்ரிஷாவை பற்றி மேடையில் பேசியது பெரிய சர்ச்சை ஆனது.

விஜய் உடன் வந்ததால் சர்ச்சை ஆன நிலையில், 'குந்தவை வீட்டிலேயே குந்த வைத்தால் நல்லது' என பார்த்திபன் பேசி இருந்தார். அதற்கு த்ரிஷாவும் பதிலடி கொடுத்து இருந்தார்.

இந்நிலையில் USTAAD BHAGAT SINGH என்ற தெலுங்கு படத்தில் பார்த்திபன் நடித்திருக்கிறார்.

அந்த படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மேடையில் பேசும்போது பார்த்திபன் தனது ஜாதி பெயரை கூறி தெலுங்கில் பேசி இருக்கிறார்.

"நான் ராதாகிருஷ்னன் பார்த்திபன். நாயுடு அப்பாயி. சென்னையில் பிறந்து வளர்ந்ததால் தமிழ் நன்றாக பேசுவேன். தெலுங்கு சரியாக தெரியாது. இந்த படத்தின் வெற்றி விழாவில் பேசும்போது நான் முழுமையாக தெலுங்கில் பேசுவேன்" என பார்த்திபன் கூறி இருக்கிறார்.

தன் ஜாதி பெயரை குறிப்பிட்டு பேசிய பார்த்திபனை நெட்டிசன்கள் ட்ரோல் செய்து வருகின்றனர்.

## சினிமா



வெளிநாட்டில் ரோட்டில் இருக்கும்போது எடுத்த கேசுவல் போட்டோக்களை ராசி கண்ணா வெளியிட்டு இருக்கிறார்.

அந்த ஸ்டில்கள் தற்போது அவரது ரசிகர்களை கவர்ந்து வருகின்றன.

# த்ரிஷா மற்றும் விஜய் குறித்து ஓபனாக பேசிய நடிகை குஷ்பு... என்ன கூறியுள்ளார் பாருங்க



தமிழ் சினிமாவில் கடந்த சில வாரங்களாக ஒரு விஷயம் மிகவும் பரபரப்பாக பேசப்படுகிறது.

அரசியல் களத்தில் விஜய் தனது முழு கவனத்தை செலுத்தி வரும் நிலையில் அவரது சொந்த வாழ்க்கை பற்றி எல்லோரும் பேச ஆரம்பித்துவிட்டனர். விஜய்யின் மனைவி சங்கீதா, தனது கணவரிடம் இருந்து விவாகரத்து கோரி நீதிமன்றம் சென்றுள்ளார்.

அதில் விஜய் மீது அவர் நிறைய குற்றச்சாட்டு கூறியிருந்தார், அதையெல்லாம் கேட்டு விஜய் ரசிகர்களே மிகவும் வருத்தப்பட்டார்கள். ஆனால் விஜய்யோ ஒரு பேட்டியில் சில விஷயங்கள் கேள்விப்பட்டு நீங்கள் வருத்தப்படுகிறீர்கள், அதை நான் பார்த்துக் கொள்கிறேன் என கூறியிருந்தார்.

அதற்கு அவர், நாம் இருக்கும் காலத்தில் யாராவது ஒரு சின்ன விஷயம் செய்தால் கூட அதை வேறு விஷயத்துக்கு குற்றம் சாட்டி பேசுவதற்கு என்றே சிலர் இருக்கிறார்கள். விஜய், த்ரிஷா எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள்.

நான் சந்தித்தவர்களில் அவர் மிகவும் மரியாதையான பெண், மிகவும் மென்மையான மனம் கொண்டவர். சமூக வலைதளங்களில் அவதூறான கருத்துக்களை பதிவு செய்து பேசுபவர்களுக்கு த்ரிஷா பதில் கூற வேண்டிய அவசியமில்லை என கூறியுள்ளார்.

# பூஜை அறையில் ஏன் தண்ணீர் வைக்கிறார்கள் என்று தெரியுமா?

ஒவ்வொரு நாளும் பூஜைக்கு சுவாமிக்கு நெய்வேத்தியம் படைப்பதுண்டு.

எச்சில் படாத உணவுகள், பழங்கள் ஆகியவற்றை நாம் கடவுளுக்கு வைக்கலாம். நம்முடைய பூஜை அறை மண் பானையிலேயோ அல்லது செம்பு பாத்திரத்திலேயோ தண்ணீரை நிரப்பி வைப்பது மிகவும் நல்ல பலனை கொடுக்கும்.

வழிபாட்டின் போது தினமும் தியானத்தில் அமர்ந்து நமக்கு பிடித்த தெய்வத்தின் மூல மந்திரத்தை சொல்ல வேண்டும். அவ்வாறு செய்வதால் நாம் சொல்லும் மந்திரத்தின் (நேர்மறை ஆற்றல்) அதிர்வலைகள் அந்த தண்ணீரில் இறங்கும். இவ்வாறு செய்து அந்த தண்ணீரை அருந்துவதால் நன்மைகள் உண்டாகும்.

பூஜையின் போது தீபாராதனை காட்டி, தெரிந்த தெய்வப் பாடல்களைப் பாடி வழிபடலாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இரும்புப் பொருள்களை பூஜைக்குப் பயன்படுத்தக் கூடாது. இரும்பு எமனுக்கு உரியது. இரும்பினால் நேர்மறை சக்திகளை கிரகிக்க முடியாது. வெள்ளி, தாமிரம், ஈயம் பூசிய பித்தளை, மண்ணால் ஆன பூஜைப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு நாள் பூஜையின்போதும் சிறிய பாத்திரத்தில் தண்ணீர் வைத்து பூஜை செய்ய வேண்டும். அடுத்த நாள் அதைக் கூரையில் ஊற்றிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் துர்சக்திகள் நம் வீட்டை அண்டாது.







பூஜையின்போது மணியோசை எழுப்புவதும் கூட துர்சக்திகள் நெருங்காமல் இருப்பதற்குத்தான். மணியின் இனிய ஓசையானது தீய சக்திகளை விரட்டி, தெய்வீக சக்தியை வீட்டில் நிலவச் செய்யும் வல்லமை கொண்டது. பூஜையின் போது ஐம்பூதங்கள் அங்கே ஐக்கியமானால் அவர்களின் சக்தி நமக்கு கிடைக்கும். இதில்...

ஆகாயம் என்பது வெட்ட வெளி. அது பூஜை அறையில் வியாபித்து இருக்கும்.

அடுத்து நிலம். அது நம்மை தாங்கி நிற்கும் தரை.
மூன்றவதாக நெருப்பு, காற்று அது நாம் பூஜை அறையில் ஏற்றும் தீபத்தில் உள்ளது.

ஆனால் தண்ணீர் அங்கு இல்லை. அதற்காக நாம் தண்ணீரையும் அங்கு வைக்கிறோம். பூஜை அறையில் தண்ணீர் வைப்பதன் மூலம் ஐம்பூங்களின் சக்தி நமக்கு கிடைக்கும் என்பதும் ஐதீகம்.

**Balachandar**

---

தினம் ஒரு தலைவர்கள்

# ஏ.எஸ்.கே. வரலாறு

ஏ. எஸ். கே. (A.S.K.) என்பவர் இந்திய பொதுவுடமை கட்சியின் தலைவர்களில் ஒருவராவார். இவரது இயற்பெயர் ஆவியூர் சீனிவாச அய்யங்கார் கிருஷ்ணமாச்சாரி என்பதாகும். தமிழகப் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் சிறந்தவராகவும் கருதப்படுகிறார். ஈ.வெ. ரா மற்றும் அம்பேத்கார் மீது இவர் பெரும் மதிப்பை கொண்டிருந்தார்.
ஆங்கில மொழிக் கவிஞர்.,
தொழிற்சங்கத் தலைவர்.
விடுதலைப் போராட்ட வீரர்.
எழுத்தாளர்.
இறைமறுப்பாளர்.
1969, சூன் 6 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் 692ஆம் பக்கத்தில் அறிவித்து தன்னுடைய பெயரை ஏ. எஸ். கே. என மாற்றிக்கொண்டவர்.



பிறப்பும் குடும்பமும்
ஆவியூர் என்னுமிடத்திலிருந்து இடம்பெயர்ந்து ஐதராபாத் நகரில் வாழ்ந்து வந்த சீனிவாச அய்யங்கார், தங்கம்மாள் இணையருக்கு ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர் ஏ. எஸ். கே. இவருடன் இராசம்மாள், பங்கசம் என்னும் இரு அக்காக்களும் இராமசாமி, துரைசாமி, பார்த்தசாரதி என்னும் மூன்று அண்ணன்களும் அரங்கனாதன் என்னும் தம்பியும் பிறந்தனர். ஏ. எஸ். கே. விற்கு மூன்று வயதாகும்பொழுது அவர்தம் அம்மா தங்கம்மாள் இயற்கை எய்திவிட்டார். எனவே, இவர்கள் அனைவரும் தம் பெரியம்மாவாகிய பொன்னம்மாளிடம் வளர்ந்தனர். ஏ. எஸ். கே.தம் தம்பியான அரங்கநாதன், ரெங்காச்சாரி என்னும் பெயரில் படித்துப் பட்டம்பெற்று, மும்பய்க்குச் சென்றார். இவர்தான் பின்னாளில் பொதுவுடைமைக் கட்சியின் வழக்கறிஞராகத் திகழ்ந்து புகழ்பெற்ற ஏ. எஸ். ஆர். சாரி ஆவார். இவர் தில்ஷாத் சையத் என்னும் மும்பை நகரைச் சேர்ந்த முசுலீம் பெண்ணை மணந்து கொண்டார்.

ஏ. எஸ். கேக்கு அண்ணன்களான துரைசாமி சாதி கடந்த திருமணமும் பார்த்தசாரதி மதம் கடந்த திருமணமும் செய்துகொண்டனர். ஏ. எஸ். கே. திருமணமே செய்துகொள்ளவில்லை.

ஆசிரியர் வேலை
ஏ. எஸ். கே. தன்னுடை பட்டப்படிப்பு முடிந்ததும் ஐதராபாத் நகரிலிருந்த கிறித்துவப்பள்ளி ஒன்றில் அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றினார்.
அப்பள்ளியில் ஏற்கனவே கிருஷ்ணமாச்சாரி என்னும் ஒருவர் வேலைபார்த்துக் கொண்டிருந்ததால், அப்பள்ளின் தலைவராக இருந்த பாதிரியார், இவரை ஏ. எஸ். கே. அய்யங்கார் என அழைக்கத் தொடங்கினார். இப்பெயரே, தன்னுடைய பெயரை சட்டப்படி மாற்றிக்கொண்ட பின்னரும், ஏ. எஸ். கே.வின் பெயராக நிலைத்துவிட்டது.
அப்பள்ளியில் ஏ. எஸ். கே. சில மாதங்களே வேலைபார்த்தார். பின்னர் அங்கிருந்து கிளம்பி சென்னைக்குச் சென்றார்.
அரசியல் வாழ்க்கை
ஏ. எஸ். கே. தாம் மாணவராக இருந்த பொழுதே, மீரத்து பொதுவுடைமையாளர் சதி வழக்கு பற்றிய செய்திகளைப் படித்ததால் பொதுவுடைமைக் கோட்பாட்டின் மீது ஆர்வம் கொண்டார். காரல் மார்ச்சு எழுதிய நூல்களைப் படித்தார். எனவே 1934 ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்த ஏ. எஸ். கே., அப்பொழுது தடைசெய்யப்பட்டிருந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார்.
1935ஆம் ஆண்டில் ம. சிங்காரவேலருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.
1937 ஆம் ஆண்டில் பெரியார் ஈ. வெ. இரா. வுடம் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.
1937ஆம் ஆண்டில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் எஸ். வி. காட்டே தொழிற்சங்க இயக்கத்திற்கும் பொதுவுடைமைக் கட்சிக்கும் வழிகாட்டுவதற்காக சென்னைக்கு வந்து தங்கியிருந்தபொழுது அவருடன் இணைந்து பணியாற்றினார்.
1937ஆம் ஆண்டில் சென்னை அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக ஏ. எஸ். கே. பதவி வகித்தார்.
விடுதலைப் போராட்ட காலத்திலும் அதற்குப் பின்னருமாக ஏ. எஸ். கே தனது அரசியல் போராட்டங்களால் பதினைந்தரை ஆண்டுகளைச் சிறையில் கழித்திருக்கிறார்.

தேச விடுதலைப் போராட்டங்களிலும் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் ஈடுபட்ட அவர், சென்னை துறைமுகத் தொழிலாளர்களுக்காக அமைத்துக் கொடுத்த தொழிற்சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலை, பயிற்சிப்பள்ளிகள் ஆகியன அவரது பெயரை இன்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றன.
எழுதிய நூல்கள்
கம்யூனிஸம் என்றால் என்ன?
கம்யூனிஸ்டு தத்துவத்தின் அடிப்படை
கடவுள் கற்பனையே புரட்சிகர மனித வரலாறு
தொழிற் சங்கம்
தங்கம்மா (நெடுங்கதை)
உலக கம்யூனிஸ்டு இயக்க வரலாறு
பகுத்தறிவின் சிகரம் ஈ. வெ. ரா, (பகத் ஹவுஸ் பப்ளிகேஷன்ஸ், 1/73 பிராட்வே, சென்னை; மு. பதிப்பு 1974)
ரஷ்யா
அம்பேத்கார் வாழ்க்கையும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையும்.
வாழ்க்கை வரலாறு
ஏ. எஸ். கே.வின் வாழ்க்கை வரலாற்றை தொழிற்சங்க மேதை ஏ. எஸ். கே. அய்யங்கார் என்னும் தலைப்பில் முத்து குணசேகரன் எழுதியிருக்கிறார். இந்நூலை சென்னையில் உள்ள சேகர் பதிப்பகம் 2008ஆம் ஆண்டில் வெளியிட்டது.

# புணே: பெண்ணை கடித்துக் கொன்ற தெரு நாய்கள்!

புவனேஸ்வர், மார்ச் 18:

இதுகுறித்து புணே சாக்கண் காவல் நிலைய அதிகாரி கூறியதாவது: புணே-நாசிக் நெடுஞ்சாலையை ஒட்டிய சாக்கண் பகுதியில் உள்ள சேவைச் சாலையில் அதிகாலை 2 மணியளவில் அந்தப் பெண் நடைப் பயிற்சி மேற்கொண்டபோது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த சாலையில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவு மூலம் இந்தச் சம்பவம் கண்டறியப்பட்டது. அந்தப் பெண் ஷோபா வக்மாரே (33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சாலையில் அவா் நடந்து செல்லும்போது நாய்கள் கூட்டம் திடீரென அவரைத் தாக்கின. நள்ளிரவு நேரம் என்பதால் சாலையில் யாரும் இல்லை. இதனால், உதவியேதும் கிடைக்காமல் சம்பவ இடத்திலேயே அந்தப் பெண் உயிரிழந்தாா். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாா்.

உச்சநீதிமன்ற உத்தரவு: தெரு நாய் கடியால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தெரு நாய்களைப் பிடித்து காப்பகங்களில் அடைக்க அனைத்து மாநிலங்களுக்கும் உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

மேலும், கல்வி, மருத்துவமனைகள் மற்றும் முக்கிய இடங்களில் சுற்றித்திரியும் நாய்களை அப்புறப்படுத்தி, கருத்தடை, தடுப்பூசி போடவும் உத்தரவிட்டது.

மேலும், இந்த உத்தரவைப் பின்பற்றாக மாநில அரசுகளுக்கு எதிராக கடும் அதிருப்தியையும் உச்சநீதிமன்றம் அண்மையில் தெரிவித்திருந்தது.

# 8 எம்பிக்கள் இடைநீக்கம் ரத்து! மக்களவையில் தீர்மானம் நிறைவேற்றம்!

புதுடெல்லி, மார்ச் 18:




எதிர்க்கட்சிகளை சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கத்தை ரத்து செய்யும் தீர்மானம் மக்களவையில் செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் பகுதியில், கடந்த பிப்ரவரி 3 அன்று, குடியரசுத் தலைவா் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது ராகுல் காந்தி உரையாற்றும்போது, முப்படைகளின் தலைமைத் தளபதி எம்.எம். நரவணே எழுதிய புத்தகத்தில் சில வரிகளைக் குறிப்பிட்டு பிரதமர் நரேந்திர மோடியையும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கையும் விமர்சித்தார்.

இதனைத் தொடர்ந்து, விவாதத்துக்கு தொடர்பில்லாத விவகாரத்தை பேச அனுமதியில்லை என்று ராகுல் காந்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களவை தலைமைச் செயலரின் மேஜை மீது ஏற முயன்றதுடன், காகிதங்களைக் கிழித்து, அவைத் தலைவா் இருக்கையை நோக்கி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வீசினர். ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக காங்கிரஸ் எம்.பி.க்களான மாணிக்கம் தாகூா், குா்ஜீத் சிங் அஜ்லா, ஹிபி ஈடன், சி.கிரண் குமாா் ரெட்டி, அமரீந்தா் சிங் வாரிங், பிரசாந்த் படோல், டீன் குரியகோஸ், மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன் ஆகியோா் கூட்டத்தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்து மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்திருந்தார்.

திங்கள்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. தில், எதிர்க்கட்சி எம்பிக்களின் இடைநீக்கத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தொடர்ந்து, இடைநீக்கத்தை ரத்து செய்ய ஓம் பிர்லா ஒப்புக் கொண்டார். இந்த நிலையில், மக்களவையில் இன்று 8 எம்பிக்களின் இடைநீக்கத்தை ரத்து செய்யும் தீர்மானத்தை ஓம் பிர்லா முன்மொழிந்தார். தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மாம்பழம் சின்னம் யாருக்கு?: உச்சநீதிமன்றம் அடுத்த வாரம் விசாரணை

புதுடெல்லி, மார்ச் 18:

மாம்பழம் சின்னத்தை தனது தரப்புக்கு ஒதுக்க வேண்டும் அல்லது அச்சின்னத்தை முடக்க வேண்டும் என்ற தனது கோரிக்கையை நிராகரித்த சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் வரும் 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜாய்மால்யா பாக்சி அமர்வில் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது பாமக நிறுவனர் தரப்பில் வழக்கை சற்று நேரத்திற்கு ஒத்திவைக்குமாறு நீதிபதிகளிடம் வழக்குரைஞர்கள் கோரிக்கை வைத்தனர். உடனே குறுக்கிட்ட அன்புமணி தரப்பு வழக்குரைஞர் மீனாக்ஷி அரோரா, இந்த மனுவில் (பாமக நிறுவனர் மனு) தற்போது எதுவும் இல்லை. ஏனெனில் தமிழ்நாடு, புதுச்சேரிக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது என தெரிவித்தார். அப்போது நீதிபதிகள் மாம்பழத்தை பெறப்போவது யார்? என்பதுதான் கேள்வி என சிரித்தபடி கூறினர். அதற்கு அன்புமணி தரப்பு வழக்குரைஞர் மீனாக்ஷி அரோரா, 'கடைசியாக எந்த அணி பதிவுசெய்யப்பட்டதோ அவர்களுக்கே சின்னம் என தேர்தல் ஆணையம் கூறுகிறது. பாட்டாளி மக்கள் கட்சி கடைசியாக பதிவு செய்யப்பட்டதன் விவரங்களின் அடிப்படையில் அந்த கட்சி அன்புமணியின் கீழ்தான் உள்ளது என்பதை தேர்தல் ஆணையம் தில்லி உயர்நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டுள்ளது. உயர்நீதிமன்றம் தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள பிரச்னையை தீர்க்க கடுமையாக முயற்சி செய்தது. ஆனால், மகனுடன் பேசத் தயாராக இல்லை என்று தந்தை கூறிவிட்டார். அவருக்கு 86-87 வயதாகிறது' என்றார். அப்போது வழக்கை ஒத்திவைக்குமாறு பாமக நிறுவனர் தரப்பில் மீண்டும் கோரப்பட்டது. இதையடுத்து, வழக்கை மார்ச் 23ம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

# பாஜகவின் வசதிக்கேற்ப தேர்தல் தேதிகள்: பிரியங்கா விமர்சனம்



புதுடில்லி, மார்ச் 18:

பாஜகவின் வசதிக்கேற்ப தேர்தல் தேதிகள் மற்றும் வாக்குப்பதிவு கட்டங்களை இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது என்று காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி விமர்சித்தார்.

தமிழகத்தில் ஏப்.23-ஆம் தேதியும், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் ஏப்.9-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29-இல் இருகட்டங்களாகவும் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் தேதிகள் ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டன. இந்நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை பேசிய காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தியிடம் தேர்தல் அட்டவணை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, 'தேர்தல் தேதிகள் மற்றும் வாக்குப்பதிவு கட்டங்கள், பாஜகவின் வசதிக்கேற்ப தீர்மானிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது' என்று அவர் பதிலளித்தார்.

திருவனந்தபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கூறுகையில், 'கேரளத்தில் ஏப்ரல் மாதத்தின் கடைசி 10 நாள்களில் தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், ஏப்.9-ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்பார்க்கவில்லை. தேர்தலுக்கு கிட்டத்தட்ட 3 வாரங்களே உள்ளன. இது குறைவான காலகட்டம்' என்றார். இதேபோல், 'கேரளத்தில் தேர்தல் பிரசாரத்துக்கு சொற்ப நாள்களே உள்ளன; இதற்கிடையே புனித வாரம் கடைப்பிடிக்கப்பட உள்ளது. விஷு பண்டிகைக்கு சில நாள்களுக்கு முன் தேர்தல் நடைபெறவுள்ளது' என்று காங்கிரஸ் பொதுச் செயலர் கே.சி.வேணுகோபால் தெரிவித்தார்.

# இந்திய ஏற்றுமதி பிப்ரவரி மாதத்தில் ரூ. 3.37 லட்சம் கோடியாக சரிவு!

புதுடெல்லி, மார்ச் 18:

இந்தியாவின் ஏற்றுமதி கடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ.3.37 லட்சம் கோடியாக சரிவடைந்துள்ளது.


இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த பிப்ரவரி மாதம் இந்தியா ரூ.3.37 லட்சம் கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இது கடந்த 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது, 0.81 சதவீதம் குறைவு ஆகும்.

அதேநேரத்தில் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கடந்த பிப்ரவரி மாதத்தில் ரூ.5.87 லட்சம் கோடிக்கு இறக்குமதி நடைபெற்றுள்ளது. இது கடந்தாண்டு பிப்ரவரி மாதம் செய்யப்பட்ட இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் 24.11 சதவீதம் அதிகம். இதற்கு தங்கம், வெள்ளி இறக்குமதி அதிகரிப்பே காரணம். பிப்ரவரி மாதம் மட்டும் தங்கம் ரூ.68,647 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 218.55 சதவீதம் அதிகம் ஆகும். இதேபோல் வெள்ளி ரூ.15,319 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 285.23 சதவீதம் அதிகம். எண்ணெய் இறக்குமதியும் 9 சதவீதம் அதிகரித்துள்ளது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் ரூ.1.19 லட்சம் கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பிப்ரவரி மாதம் வர்த்தக பற்றாக்குறை ரூ.2.49 லட்சம் கோடியாகும். இது கடந்த ஜனவரி மாதத்துடன் (ரூ.3.20 லட்சம் கோடி) ஒப்பிடும்போது குறைவாகும். எனினும் கடந்த 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் வர்த்தக பற்றாக்குறை அதிகரித்துள்ளது. அதாவது கடந்த 2025 பிப்ரவரி மாதத்தில் ரூ.1.29 லட்சம் கோடியாக இருந்த வர்த்தக பற்றாக்குறை, நிகழாண்டு பிப்ரவரி மாத்ததில் ரூ.2.49 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. அரிசி, கடல்சார் பொருள்கள், முத்துக்கள், நகைகள், மருந்துகள், ரசாயனங்கள், மின்னணு சாதனங்கள், கட்டுமான சாதனங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி பிப்ரவரி மாதத்தில் இந்தியாவுக்கு சாதகமாக இருந்துள்ளது என்று அந்த தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுப்பு, சம்பளம் மறுப்பு: வங்கி மேலாளருக்கு ஏற்பட்ட கதி!

புதுடெல்லி, மார்ச் 18:



லக்னௌவின் காஜியாபாத்தில் உள்ள ஒரு வங்கியில் விடுப்பு, சம்பளம் தொடர்பான பிரச்னைகளால் வங்கி மேலாளரை பாதுகாவலர் ஒருவர் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக லோனி எல்லைப் பகுதி காவல் நிலைய ஆய்வாளர் கூறுகையில்,

லோனி கிளையின் பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியில் வங்கி மேலாளராகப் பணியாற்றி வருபவர் 34 வயது அபிஷேக் குமார். இவர் பாட்னாவைச் சேர்ந்தவர். 2025 முதல் காஜியாபாத்தில் உள்ள வங்கியில் பணியமர்த்தப்பட்டுள்ளார். இவர் தனது மனைவியுடன் வாடகை வீட்டில் வசித்து வந்தார். அதே வங்கியில் பாதுகாப்பு ஊழியராக ரவீந்திர ஹூடா (50), அவருக்குத் துணையாக ஷிஷுபால் (57) ஆகியோர் பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில், கடந்த இரண்டரை மாதங்களாக ரவீந்திர ஹூடாவுக்கு விடுப்பு கேட்டபோதெல்லாம் மறுக்கப்பட்டதாகவும், சம்பளம் குறைக்கப்படதாகவும் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அவருக்கும் வங்கி மேலாளருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த பாதுகாவலர் ரவீந்திர ஹூடா வங்கி மேலாளரைத் தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டுள்ளார். இச்சம்பவம் நடந்தபோது ஷிஷுபால் அவருடன் இருந்துள்ளார்.

இதையடுத்து, காயமடைந்த வங்கி மேலாளர் சிகிச்சைக்காகத் தில்லியில் உள்ள ஜிடிபி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பாதுகாவலர்கள் ரவீந்திர ஹூடா மற்றும் ஷிஷுபால் ஆகிய இருவரும் உத்தரப் பிரதேச மாநிலம் பாக்வத் மாவட்டத்தில் உள்ள ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 24 மணி நேரத்தில் சென்றடையும் விரைவு தபால் சேவை: மத்திய அரசு அறிமுகம்

புதுடெல்லி, மார்ச் 18:

24 மணி நேரத்தில் தபால் சென்றடைவதை உறுதிப்படுத்தும் '24 விரைவு தபால்' சேவையை மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா செவ்வாய்க்கிழமை தொடங்கிவைக்கிறார். முதல்கட்டமாக தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இச்சேவை அறிமுகப்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அதிமுக்கிய மற்றும் அவசரமாக அனுப்பப்படும் தபால்கள் அடுத்த நாளே சென்றடைவதை உறுதிப்படுத்தும் '24 விரைவு தபால்' சேவையை மார்ச் 17-ஆம்தேதிதுறைசார் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா மற்றும் இணையமைச்சர் சந்திர சேகர் பெம்மசானி தொடங்கிவைக்கின்றனர். இத்துடன் 2 நாள்களில் தபால் சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் '48 விரைவு தபால்' சேவையும் 6 முக்கிய நகரங்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது. ஒருமுறைபயன்படுத்தப்படும் கடவுச்சொல் (ஓடிபி), குறுஞ்செய்தி எண்ட் டு எண்ட் என்கிரிப்ட் வசதி, வணிக நுகர்வோர்களுக்கான பின்னர் பணம் செலுத்தும் வசதி (பிஎன்பிஎல்), ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படும் முன்பதிவுகளுக்கு இலவச சலுகைகள், ஏபிஐ ஒருங்கிணைப்பு மற்றும் பில்லிங், விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டால் பணம் திருப்பியளிக்கப்படுவதற்கான உத்தரவாதம் போன்ற அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

# குழந்தை தத்தெடுப்பு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்: மாநிலங்களுக்கு சிஏஆர்ஏ அறிவுறுத்தல்



புதுடெல்லி, மார்ச் 18:

குழந்தை தத்தெடுப்பு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு, அவர்களின் அடையாளம் பாதுகாப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய தத்தெடுப்பு வள ஆணையம் (சிஏஆர்ஏ) வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் சிஏஆர்ஏ செயல்படுகிறது. அந்த ஆணையம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உள்ள அனைத்து மாநில தத்தெடுப்பு வள முகமைகளுக்கு 3 முக்கிய அறிவுறுத்தல்களை அனுப்பியுள்ளது. அந்த அறிவுறுத்தல்களில், 'ஒரு குழந்தையை சட்டபூர்வமாக தத்தெடுக்கலாம் என்று முடிவு செய்யும் முன், அதற்கான சட்ட நடைமுறைகள் மற்றும் கால வரையறைகள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளுதல், அவர்களின் பெற்றோரை கண்டறிதல், அவர்களிடம் குழந்தையை சேர்க்க முயற்சித்தல் மற்றும் பிற சட்டபூர்வ நடவடிக்கைகளை வரையறுக்கப்பட்ட கால வரம்புக்குள் நிறைவு செய்ய வேண்டும். இதைச் செய்யாமல் அந்தக் குழந்தைகளை சட்டபூர்வமாகத்தெடுக்கலாம் என்று முடிவு செய்யக் கூடாது.

தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பின்னர், தங்கள் பூர்விகம் குறித்த தகவல்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சில வேளைகளில், சம்பந்தப்பட்ட சிறப்பு தத்தெடுப்பு முகமை (எஸ்ஏஏ) அல்லது குழந்தை பராமரிப்பு மையம் (சிசிஐ) மூடப்பட்டது, அவற்றின் செயல்பாடுகள் வேறு மையத்துக்கு மாற்றப்பட்டது போன்ற காரணங்களால் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் குறித்த ஆவணங்கள் கிடைப்பதில்லை. இதைக்கருத்தில் கொண்டு, ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் தத்தெடுத்தக்கப்பட்ட குழந்தைகளின் விவரங்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களும் பாதுகாப்பாகப் பராமரிக்கப்படுவதை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உறுதி செய்யவேண்டும். குற்ற சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் 18 வயதுக்குள்பட்ட சிறார்கள், பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தேவைப்படும் குழந்தைகளின் அடையாளம் பொதுவெளியில் வெளியிடப்படுவதை சிறார் நீதிச் சட்டத்தின் 74-ஆவது பிரிவு தடை செய்கிறது.

# நீர் விநியோகத்தை அதிகரிக்க ஹரியாணாவுடன் டில்லி அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது

மும்பை, மார்ச் 18:

தற்போது, நகரத்தின் சராசரி நீர் உற்பத்தி ஒரு நாளைக்கு 900 - 1,000 மில்லியன் கேலன்கள் (எம்ஜிடி) வரை உள்ளது. அதே நேரத்தில் சராசரி நீர் தேவை சுமார் 1,260 எம்ஜிடி ஆகும். கோடை காலத்தில் தேவை உச்சத்தை அடைகிறது.

'எங்கள் விநியோக பாதைகளில் உள்ள இடைவெளிகளை நாங்கள் சரிசெய்து நீர் இழப்புகளைக் குறைக்கும் அதே வேளையில், தில்லி அரசு ஹரியாணாவிலிருந்து 30 கன அடி தண்ணீரை சுத்திகரிக்கப்பட்ட தண்ணீருக்கு ஈடாக பரிமாறிக்கொள்ளும் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இது அவர்களின் மாநிலத்தில் பாசன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்" என்று நீர்வள அமைச்சர் பர்வேஷ் சாஹிப் சிங் கூறினார்.

அமைச்சரின் கூற்றுப்படி, ஹரியாணாவிலிருந்து பரிமாற்றத்தில் 20 சதவீத நீர் இழப்பு ஒரு முக்கியகாரணியாக உள்ளது. இது தேவை மற்றும் உற்பத்தியில் இடைவெளியை அதிகரிக்கிறது. தில்லி ஜல் போர்டு (டிஜேபி) தற்போது ஒன்பது நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி, சுமார் 864 எம்ஜிடி தண்ணீரை வழங்குகிறது. மீதமுள்ள 126 எம்ஜிடி நீர் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

'டில்லியில் மூல நீரின் முக்கிய ஆதாரங்களில் ஒன்று ஹரியாணாவின் முனாக் கால்வாய் ஆகும். இது தில்லியின் மொத்த நீர் விநியோகத்தில் 60 சதவீதத்தை கொண்டுள்ளது. வட இந்திய மாநிலங்களுக்கு இடையிலான நீர் பகிர்வு ஏற்பாட்டின்படி, ஹரியாணா முனாக் கால்வாய் மற்றும் யமுனை வழியாக தில்லிக்கு சுமார் 1,133 கனஅடி தண்ணீரை வழங்குகிறது' என்று ஒரு அதிகாரி கூறினார். 'தண்ணீர் பெறும் முக்கிய கால்வாய்களையும் சரிசெய்ய அண்டை அரசுடன் நாங்கள் பேசி வருகிறோம். டிரான்ஸ்மிஷன் இழப்புகளைத் தவிர்த்து, தில்லிக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நீரைப் பெற வேண்டும். விநியோகத்தின் போது நீர் இழப்பைக் குறைக்க, தில்லி ஜல் போர்டு தலைநகர் முழுவதும் பழைய நீர் குழாய்களை மாற்றுகிறது என்று ' என்று அமைச்சர் கூறினார்.

# கடன் மீட்பு வழக்குகளைத் தீர்க்க 4 சிறப்பு லோக் அதாலத்: நிர்மலா சீதாராமன் தகவல்

புதுடில்லி, மார்ச் 18:

மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து அவர் கூறியதாவது: கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் மற்றும் கடன் மீட்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களின் முன் நிலுவையில் உள்ள வழக்குகளில் பெரும்பாலானவை ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்புடையவையாகும். கிட்டத்தட்ட 71 சதவீத வழக்குகள் அதிக மதிப்பு கொண்டவையாக உள்ளன. நிலுவை வழக்குகளுக்குத் தீர்வுகாண இருமுனை உத்தியை மத்திய அரசு ஏற்றுள்ளது. முதலாவது, ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்பு கொண்ட வழக்குகளை விசாரிக்க பிரத்யேக கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது, மாற்று வழிமுறைகள் அதாவது லோக் அதாலத் போன்ற தளங்களின் வாயிலாக பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வங்கிகள் மற்றும் நிதி சார் நிறுவனங்களை ஊக்குவிப்பதாகும். இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, கடன் மீட்பு வழக்குகளுக்காகவே சிறப்பு லோக் அதாலத்-களை ஏற்பாடு செய்வது குறித்து இந்திய தேசிய சட்டப் பணிகள் ஆணையத்துடன் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. தேசிய லோக் அதாலத் தவிர, நடப்பாண்டில் கடன் மீட்பு வழக்குகளுக்குத் தீர்வுகாண 4 சிறப்பு லோக் அதாலத்-களை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலுவை வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண முடியும் என்றார் நிர்மலா சீதாராமன்.

'ஸ்டாண்ட்-அப் இந்தியா' திட்டம் மேலும் சிறப்பான பலன்களுடன் புதுப்பிக்கப்பட்டு விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.




## நெல்லை அருகே எரிந்த நிலையில் இருந்த காரில் 4 சடலங்கள் மீட்பு: போலீஸார் தீவிர விசாரணை!



**திருநெல்வேலி, மார்ச்.18:** திசையன்விளை அருகே முற்றிலும் எரிந்த நிலையில் காணப்பட்ட காரில் இருந்து நான்கு பேர் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே பெட்டைக் குளம் பகுதியில் இருந்து ஆத்தங்கரை பள்ளிவாசல் செல்லும் சாலையோரம் கார் ஒன்று முற்றிலும் எரிந்த நிலையில் காணப்பட்டது குறித்து போலீஸாருக்கு இன்று காலையில் தகவல் கிடைத்தது.

இதையடுத்து வள்ளியூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் வெங்கடேஷ் தலைமையிலான போலீஸார் அங்கு சென்று விசாரணை நடத்தினர். திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரசன்ன குமாரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டார். முற்றிலும் எரிந்த நிலையில் காணப்பட்ட காருக்குள் 4 சடலங்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு எரிந்த நிலையில் காணப்பட்டன. சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக போலீஸார் அனுப்பி வைத்துள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு தடய அறிவியல் துறையினர் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காரில் இறந்தவர்கள் யார் எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள், இது விபத்தா அல்லது வேறு காரணங்களால் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதா என்பது குறித்து முழுமையான விசாரணைக்கு பின்பே தெரிய வரும். காரின் இன்ஜின் எண் மற்றும் பதிவு எண் ஆகியவற்றைக் கொண்டு காரில் இருந்தவர்களை அடையாளம் காணும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட ரூ.12.49 லட்சம் மதிப்பிலான வெள்ளி கட்டி, பொருட்கள் சிக்கின

**சென்னை, மார்ச்.17:** சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட, ரூ.12.49 லட்சம் வெள்ளி பொருட்கள் சிக்கின.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இதன் காரணமாக, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஆர்பிஎஃப் காவல் ஆய்வாளர் மதுசூதன ரெட்டி தலைமையிலான போலீஸார் நேற்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, நாகர்கோவிலில் இருந்து சென்ட்ரலுக்கு விரைவு ரயில் நேற்று வந்தது. அதிலிருந்து இறங்கி வந்த பயணிகளை கண்காணித்தபோது, ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டது.

அவரைப் பிடித்து, அவரது பைகளை சோதித்தபோது, அதில் வெள்ளிக கட்டி மற்றும் வெள்ளி பொருட்கள் இருந்தன. இவற்றின் மொத்த எடை 4 கிலோ 527 கிராம். இதன் மதிப்பு ரூ.12.49 லட்சம் ஆகும். இந்த வெள்ளி பொருட்களுக்கு உரிய ஆவணங்கள் அவரிடம் இல்லை.

இதையடுத்து, அவரிடம் விசாரித்தபோது, அவர் வேலூரைச் சேர்ந்த நாகப்பன் மோகன் (39) என்பதும், அரக்கோணத்தில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வந்ததும், அவரிடம் வெள்ளி பொருட்களுக்கான உரிய ஆவணங்கள் இல்லை என்பதும் தெரியவந்தது.

தொடர்ந்து அவரையும், வெள்ளி பொருட்களையும் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## கல்லூரி மாணவி இறப்புக்கு காரணமான போலீஸ்காரருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**சென்னை, மார்ச்.17:** ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் நிலை போலீஸ்காரரான மகேஷ் (33), சென்னை புழல் சிறை கண்காணிப்பாளரின் தனிப் பாதுகாவலராக பணிபுரிந்து வந்தார்.

கடந்த 2020-ம் ஆண்டு இவருக்கும், வண்ணாரப்பேட்டை பகுதியைச் சேர்ந்த 16 வயது மைனர் பெண்ணான கல்லூரி மாணவி ஒருவருக்கும் முகநூல் மூலமாக பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அப்பெண்ணை காதலிப்பதாக கூறிய மகேஷ், ஒரு கட்டத்தில் வீடியோ கால் மூலமாக அந்த மாணவியை ஆபாசமாக புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து மிரட்டியுள்ளார். பின்னர் மாணவியை கோவளம் பகுதியில் உள்ள கடற்கரை தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதில் அந்த மாணவி கர்ப்பமடைந்துள்ளார். பின்னர் திருமணம் செய்ய மறுத்து, கர்ப்பத்தை கலைக்கவும் மகேஷ் வற்புறுத்திஉள்ளார். இதனால் மனமுடைந்த மாணவி, கடந்த 2020 நவ.19-ம் தேதி வீட்டில் தீக்குளித்தார்.

ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், 2 நாட்களுக்கு பிறகு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இறக்கும் முன்பாக தனது நிலைமைக்கு மகேஷ் தான் காரணம் என வாக்குமூலம் அளித்து இருந்தார். தனது மகளின் இறப்புக்கு காரணமான மகேஷை கைது செய்யக்கோரி மாணவியின் தாயார் எம்கேபி நகர் போலீஸில் புகார் அளித்தார். ஆரம்பத்தில் தற்கொலை என பதியப்பட்ட இந்த வழக்கு, பின்னர் சிபிசிஐடி போலீஸாரின் விசாரணைக்கு மாற்றப்பட்டது.

சிபிசிஐடி போலீஸார் போக்சோ சட்டத்தின்கீழ் மகேஷ் மீது பாலியல் வன்கொடுமை வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். இந்த வழக்கு விசாரணை சென்னை அல்லிக்குளம் மகளிர் நீதிமன்றத்தில் நீதிபதி பிரபாபர் முன்பாக நடந்து வந்தது.

சிபிசிஐடி போலீஸார் தரப்பில் அரசு வழக்கறிஞர் ரவீந்திரன் ஆஜராகி, இறந்த மாணவியின் மரண வாக்கு மூலத்தை ஆதாரமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதையடுத்து நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட போலீஸ்காரர் மகேஷிக்கு இரட்டை கடுங்காவல் ஆயுள் தண்டனையும், ரூ.1.10 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும், மாணவியின் தாயாருக்கு தமிழக அரசு ரூ.5 லட்சத்தை இழப்பீடாக வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஆன்லைனில் வேட்புமனு தாக்கல்! தேர்தல் ஆணையத்தின் புதிய வசதி!

**சென்னை, மார்ச்.17:** எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத்தேர்தலுக்காக ஆன்லைனில் வேட்புமனு தாக்கல் செய்யும் புதிய வசதியை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது.

வேட்பாளர்களின் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், மற்றும் தற்காலிக கட்சி அலுவலகம் அமைத்தல், வேட்புமனு தாக்கல் உள்ளிட்டவற்றுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுவிதா(Suvidha 2.0) என்ற செயலி மூலம் வாயிலாகவும் அனுமதி பெறலாம்.

சென்னை ரிப்பன் மாளிகையில் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான குமரகுருபரன் தலைமையில் நேற்று(மார்ச் 16) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த குமரகுருபரன் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையம் தமிழகத்தில் தேர்தல் தேதியை அறிவித்துள்ளது. சென்னையில் 16 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு போலீஸ் மற்றும் தேர்தல் அலுவலர்கள்



கொண்ட 375 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் வாக்கு எந்திரங்களை தயார் செய்யும் பணி, வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைத்தல், வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர், வாக்கு என்னும் மையத்திற்கு கொண்டு செல்லுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வார்கள்.

வாக்குச்சாவடி அலுவலர்கள் சுமார் 16,500 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு சட்டமன்றத் தொகுதி வாரியாக பயிற்சிகள் அளிக்கப்படும்.

மாவட்ட தேர்தல் அலுவலக ரிப்பன் கட்டடத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறைக்கு கட்டணமில்லா தொலைபேசி எண் 18004257012 மூலம் புகார் தெரிவிக்கலாம்.

ஒரு தொகுதியில் ஒரு வேட்பாளர் ரூ. 40 லட்சம் வரை செலவு செய்யலாம், கட்டண விவரங்கள் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேர்தலுக்காக செலவிடப்படும் செலவினத்தை கணக்கீடு செய்ய விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விலைப்பட்டியலின் அடிப்படையில் வேட்பாளரின் தேர்தல் செலவீனம் கணக்கிடப்படும்.

வேட்பாளர்களின் பொதுக்கூட்டங்கள். ஊர்வலங்கள் மற்றும் தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல், வேட்புமனு தாக்கல் உள்ளிட்டவற்றுக்கு அனுமதி பெறுவதற்காக “சுவிதா 2.0” என்ற செயலி மூலம் அனுமதி பெறும் நடைமுறையினை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது.

வேட்பாளர்கள் https://suvidha.eci.gov.in என்ற இணையதளத்தின் மூலமும் விண்ணப்பம் செய்து கொள்ளும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதள முகவரி வாயிலாக அனுமதி பெற, நிகழ்விற்கு 48 மணி நேரத்திற்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் நிர்வாகிகளும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் ஆகியோர் இந்த சுவிதா இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்தார்.

## ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு - அசல் சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் வெளியிடுவதில் தாமதம்: டிஎன்பிஎஸ்சி மீது தேர்வர்கள் அதிருப்தி

**சென்னை, மார்ச்.17:** நேர்காணல் இல்லாத பதவிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தகுதிபெற்றோர் பட்டியலை வெளியிட கால தாமதம் ஏற்பட்டிருப்பதால், டிஎன்பிஎஸ்சி மீது தேர்வர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.




உதவி இன்ஜினியர், வேளாண் விரிவாக்க அலுவலர், உதவி இயக்குநர் (தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்), மீன்வள ஆய்வாளர், இளநிலை அறிவியல் அலுவலர், உதவி பிரிவு அலுவலர் (மொழிபெயர்ப்பு), உதவி சுற்றுலா அலுவலர் (கிரேடு-2) உட்பட 51 வகையான பதவிகளில் 1,033 காலியிடங்களை நிரப்ப கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் ஜனவரி 23-ம் தேதி வெளியிடப்பட்டன.

இதைத்தொடர்ந்து பிப்.26-ம் தேதி இணையவழி சான்றிதழ் சரிபார்ப்புக்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பட்டியல் வெளியானது.

வழக்கமாக இணையவழி சான்றிதழ் சரிபார்ப்புப் பட்டியல் வெளியானதும் உரிய சான்றிதழ்களை சமர்ப்பிக்காதவர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டு, நேரடி அசல் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தகுதி பெற்றவர்களின் பட்டியல் உடனடியாக வெளியிடப்பட்டுவிடும்.

ஆனால், நேர்காணல் இல்லாத பதவிகளுக்காக நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் இணையவழி சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் வெளியிட்டு 3 வாரங்கள் ஆகியும் இன்னும் அசல் சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் வெளியிடப்படவில்லை.

இணையவழி சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில் யாரேனும் உரிய சான்றிதழ்களை ஆன்லைன் விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யாமல் இருந்தாலும், குறைபாடான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்திருந்தாலும் அவர்களுக்கு இன்னும் கால அவகாசம் ஏதும் தரப்படவில்லை.

இதனால், மதிப்பெண் தரவரிசையில் முன்னிலையில் இருந்து பணி வாய்ப்பு பெறும் நிலையில் உள்ள தேர்வர்கள் டிஎன்பிஎஸ்சி மீது அதிருப்தி அடைந்துள்ளனர்.

நேரடி சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியலுக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் வெளியிட்டு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வை நடத்தி பணிக்கு தேர்வானோர் பட்டியலை டிஎன்பிஎஸ்சி விரைவில் வெளியிட வேண்டும் என்று அத்தேர்வர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாதாந்திர பாஸ் பெறும் பயணிகளுக்கு ‘சென்னை ஒன்’ செயலியில் புதிய வசதி

**சென்னை, மார்ச்.17:** சென்னையில் போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் (கும்டா) ஏற்படுத்தப்பட்டது.

இந்த குழுமம் வாயிலாக ‘சென்னை ஒன்’ என்ற செயலி உருவாக்கப்பட்டு கடந்த செப்.22-ம் தேதி முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த செயலி வாயிலாக மெட்ரோ ரயில், மின்சார ரயில், மாநகரப் பேருந்துகளில் பயணிப்பதற்கான டிக்கெட்களை க்யூஆர் குறியீடு வழியாகப் பெறலாம்.

இந்த 3 சேவைகளுக்கும் சேர்த்து அல்லது தனித் தனியாகவும் மக்கள் இந்த செயலியில் டிக்கெட் பெற முடியும். இந்த செயலியை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் மாநகரப் பேருந்துகளில் ரூ.1,000, ரூ.2,000-க்கான மாதாந்திர பேருந்து அட்டைகளும் இதில் விநியோகிக்கப்படுகிறது.

அதன்படி, செயலி மூலம் புகைப்படம் மற்றும் தொகையை பதிவேற்றி மாதம்தோறும் பயண அட்டைகளைப் புதுப்பித்துக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பேருந்தில் ஏறியதும் ‘சென்னை ஒன்’ செயலியில் உள்ள மாதாந்திர பயண அட்டையில், பயணிக்கும் பேருந்தின் எண்ணைப் பதிவிடுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு முறை பயணத்தின் போதும், பேருந்தின் எண்ணைப் பதிவிடுவது சிரமமாக இருப்பதாக பயணிகள் புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இனி அந்த செயலியில் உள்ள மாதாந்திர பேருந்து அட்டையை நடத்துநரிடம் காண்பித்தால் போதும் என்று கும்டா தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பு பயணிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

## ஆகாஷ் உயிரிழந்த விவகாரம்: காவல் துறையினர் 11 பேருக்கு சிபிசிஐடி சம்மன்!



**சிவகங்கை, மார்ச்.17:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் போலீஸ் விசாரணையில் ஆகாஷ் உயிரிழந்த சம்பவத்தில் காவல் துறையினர் 11 பேருக்கு சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

மானாமதுரையில் ஜெயக்குமார், அழகர் ஆகிய இருவரும் வாளால் வெட்டப்பட்ட சம்பவத்தில் கிருஷ்ணராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் கைது செய்யப்பட்டார். போலீஸாரிடமிருந்து தப்பிச் செல்ல முயன்றபோது இவருக்கு கால் முறிவு ஏற்பட்டு, மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இவர் கடந்த 8-ஆம் தேதி உயிரிழந்தார்.

இதைத்தொடர்ந்து, ஆகாஷ் உயிரிழப்புக்கு காரணமான போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தொடர்ந்து 5 நாள்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இந்த வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டது.

பின்னர், இந்த விவகாரத்தில் மானாமதுரை காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராகப் பணியாற்றிய திலீபன், உதவி ஆய்வாளர் குகன், போலீஸார் தெய்வேந்திரன், காளீஸ்வரன், சரத்குமார், மனோகரன் ஆகிய 6 பேர் கடந்த வெள்ளிக்கிழமை பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து, மானாமதுரை காவல் ஆய்வாளா குமாரவேல் பாண்டியனை, நெல்லை காவல் சரகத்துக்கு பணியிட மாற்றம் செய்து தென்மண்டல ஐ.ஜி. விஜயேந்திரபிதாரி உத்தரவிட்டார். இதேபோல, தனிப்பிரிவு காவலா முனீஸ், மதுரை மாவட்டத்துக்கும்பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக மானாமதுரை டிஎஸ்பி ராஜா, தனிப்பிரிவு எஸ்ஐ முத்துராஜா, காவலர் முத்துப்பாண்டி உள்ளிட்ட 11 பேருக்கு சிபிசிஐடி போலீஸார் சம்மன் அனுப்பியுள்ளனர்.

மதுரை சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், விசாரணையின் அடிப்படையில் மற்றவர்களை வழக்கில் சேர்ப்பது குறித்து முடிவு செய்யப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சென்னை விமான நிலையத்தில் 40 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம்: விரிவாக்கப் பணி காரணமாக நடவடிக்கை

**சென்னை, மார்ச்.17:** சென்னை விமான நிலையத்தில் விரிவாக்கம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதால், 40 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையத்தில் பேஸ் 2 மற்றும் டெர்மினல் 3 கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனால், பயணிகள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்பு கருதி, விமான நிலையத்தில் போக்குவரத்து மாற்றங்களை இந்திய விமான நிலைய ஆணையம் அறிவித்துள்ளது.




அதன்படி, சென்னை விமான நிலையம் டெர்மினல் 4 அருகே தற்காலிக போக்குவரத்து மாற்றங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன. டெர்மினல் 4 அருகே உள்ள வாகனங்கள் உள்ளே வருவதற்கான டோல்கேட் மூடப்பட்டுள்ளது. தாம்பரம் பகுதியில் இருந்து விமான நிலையத்துக்குள் வரும் அனைத்து வாகனங்களும் ஜிஎஸ்டி சாலை சர்வீஸ் சாலையை பயன்படுத்தி, டெர்மினல் 2 நுழைவு வாயில் டோல்கேட் வழியாக விமான நிலையத்துக்குள் வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

டெர்மினல் 4 புறப்பாடு பகுதியில் இருந்து வெளியேறும் வாகனங்கள், ஒரே ஒரு டோல் வழியாக வெளியே செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு டிராபிக் மார்ஷல்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். டெர்மினல் 1, டெர்மினல் 2 வழியாக பயணிக்கும் பயணிகளுக்கு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. அவர்கள் வழக்கமான வழிகளை பயன்படுத்தலாம்.

பயணிகள் வசதிக்காக டெர்மினல் 1, டெர்மினல் 2 இடையே இயக்கப்படும் பேட்டரி வாகனங்கள் வழக்கம் போல் இயக்கப்படுகின்றன. ஆனால், டெர்மினல் 1, டெர்மினல் 4 இடையே இயக்கப்படும் பேட்டரி வாகனங்கள் தற்காலிகமாக நிறுத்தப்படுள்ளது.


### ஏப்ரல் 24 வரை அமல்

பயணிகள் வசதிக்காக, டெர்மினல் 1, டெர்மினல் 4 இடையிலான வாக்கலேட்டர் வசதிகள் வழக்கம்போல் இயக்கப்படுகிறது. இந்த ஏற்பாடுகள் அனைத்தும் நேற்று (16-ம் தேதி) முதல் வரும் ஏப்.24-ம் தேதி வரை 40 நாட்களுக்கு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 15ம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேக மற்றும் லட்சார்ச்சனை திருப்பாவாடை மகோற்சவம் விழா



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஶ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் வருகிற (23.03.2026) திங்கட்கிழமை அன்று ஸம்வத்ஸராபிஷேக மற்றும் லட்சார்ச்சனை திருப்பாவாடை மகோற்சவம் விழா சிறப்பாக நடைபெற்ற உள்ளது. அனைவரும் வருக! எம்பொருமான் அருள் பெறுக!! நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், நித்ய பூஜை கைங்கர்ய & லட்சார்ச்சனை குழு மற்றும் உபயதார்கள் செய்து வருகின்றனர்.



மேற்கு மாம்பலம் - ஸ்ரீ பாஷ்யகார ஸ்ரீ செங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம். பத்தாம் நாள் மாலை லை ஶ்ரீ பெருமாள் வெட்டி வேர் சப்பரத்தில் மற்றும் ஶ்ரீ பாஷ்யகாரர் இரட்டை புறப்பாடு - த்வாஜ அவரோஹனம்.

## லைலத்தர் கதர் சிறப்பு நிகழ்ச்சி குன்னத்தூர் மதினா பள்ளிவாசல்



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ஆர் குன்னத்தூர் மதினா மஜித் பள்ளிவாசலில் லைலத்துல் கதர் முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது இமாம் ஷாஜஹான் தொழுகை நடத்தி பயான் செய்தார். பின்னர் துவா ஓதப்பட்டு அனைவருக்கும் பூந்தி வழங்கப்பட்டது. மஜீத் முத்தவல்லி காதிரியான் பட்டேல் ஹபிபுல்லாகான் நிர்வாகிகள் ஷமியுல்லா , இனாயத், அன்வர், மற்றும் இஸ்லாமிய சகோதரர்கள் குழந்தைகள் கலந்து கொண்டார்கள். எப்தியார் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பாக செய்த குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளிவாசல் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது ஆதம் ஷரீ◌ஃப் ஜாபர் ஏற்பாடுகளை செய்தார்கள்.

# தயாபுரம் முத்து மாரியம்மன் புற்றுக் கோவிலில் பங்குனி பொங்கல் விழா தொடங்கியது





**மானாமதுரை, மார்ச், 18:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பிரசித்தி பெற்ற தயாபுரம் அருள்மிகு ஶ்ரீ முத்து மாரியம்மன் புற்றுக் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி பொங்கல் விழா நடைபெறும். 44 ஆம் ஆண்டு பங்குனி பொங்கல் விழா அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.

காலை சிறப்பு கணபதி ஹோமம் அதைத் மாரியம்மனுக்கு பதினாறு வகையான அபிஷேகம் செய்து வெள்ளி கவசம் சாற்றி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. முக்கிய நிகழ்ச்சியான பங்குனி பொங்கல் விழா மற்றும் தீச்சட்டி, பால்கு டம்,பூ கரகம் எடுக்கும் விழா மார்ச் 24ம் தேதி செவ்வாய் கிழமை நடைபெறுகிறது.

அன்றையதினம் கோயில் பூசாரி சுப்பிர மணியனுடன் ஏராளமான பக்தர் கள் மானாமதுரை வைகை ஆற்றிலிருந்து பூகரகம், தீச் சட்டி, பால்குடம் எடுத்து வந்து கோவில் முன் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

விழாவில் காட்டு உடைகுளம், எம்.ஜி.ஆர் நகர், கணபதி நகர், ஆலங் குளம், தயா நகர், சிப்காட் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் சார்பில் மண்டகப் படிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடை பெறும்.

பத்து நாட்கள் விழா ஏற்பாடுகளை கோவில் டிரஸ்ட் சார்பில் எஸ்பி.சுப்பிரமணியன், எஸ்பி.நாகராஜன், எஸ்பி.முருகன் மற்றும் விழா குழுவினர் செய்து வருகின்றனர். வரும் 28 ந்தேதி சனிக்கிழமை சிறப்பு அன்னதானம் நடைபெறுகிறது.

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் மோட்ச தீப வழிபாடு



**சிதம்பரம், மார்ச், 18:** மராட்டிய மகாராஜா சத்ரபதி சம்பாஜி அவர்களின் 337 வது நினைவு தினம் முன்னிட்டு அருள்மிகு சிதம்பரம் தில்லை நடராஜர் திருக்கோவிலில் நான்கு கோபுர உச்சியில் விளக்கு ஏற்றி மோட்ச தீப வழிபாடு நடைபெற உள்ளது... பொதுமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மன்னர் இந்நாட்டுக்காக செய்த தியாகத்தை போற்றி வணங்குவோம்... நாள்:18/03/2026 புதன் கிழமை நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு சார்பில் செய்யப்பட்டு வருகிறது.

# ஆதவ் அர்ஜுனாவின் அரசியல் வருகைப் பேச்சு! ரஜினிகாந்த் எதிர்வினை!

**சென்னை, மார்ச்.18:** நடிகர் ரஜினிகாந்தின் அரசியல் வருகை குறித்து தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா பேச்சுக்கு, நடிகர் ரஜினிகாந்த் எதிர்வினையாற்றியுள்ளார்.

திமுக கொடுத்த பயத்தால், நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவில்லை என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா அண்மையில் கூறியிருந்தார்.

அவரின் இத்தகையப் பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், ஆதவ் அர்ஜுனாவின் பேச்சுக்கு பதலளிக்கும் வகையில், ரஜினிகாந்த்அறிக்கையொன்றை தன்னுடைய சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



அதில் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்திருப்பதாவது:

"தவெக கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா சமீபத்தில் என்னைப் பற்றி உண்மைக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அவருடைய அவதூறுக் கருத்தைக் கண்டித்து, எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் ரகுபதி, தொல்.திருமாவளவன், எஸ்.பி.வேலுமணி, நண்பர் அண்ணாமலை, அர்ஜுனமூர்த்தி, அன்புமணி ராமதாஸ், ஜி.கே. வாசன், ஜான் பாண்டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி. தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள், மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத்துறையினர், என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்'" என்று குறிப்பிட்டுள்ளார்.

# வணிக சமையல் காஸ் தட்டுப்பாடு எதிரொலி: சென்னையில் விறகு அடுப்பு உற்பத்தி அதிகரிப்பு

**சென்னை, மார்ச்.18:** வணிக சமையல் காஸ் தட்டுப்பாடு எதிரொலியாக சென்னையில் விறகு அடுப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் இரான் இடையிலான போர் காரணமாக இந்தியா முழுவதும் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வணிக சிலிண்டர்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. வீட்டு உபயோக சிலிண்டர் பதிவு, ஏற்கெனவே பதிவு செய்த தேதியிலிருந்து, அடுத்த சிலிண்டர் பதிவு செய்வதற்கான இடைவெளி 21 நாட்களாக இருந்தது, நகர்ப்புறங்களில் 25 நாட்களாகவும், ஊரக பகுதிகளில் 45 நாட்களாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டரை ஐவிஆர்எஸ், செயலி, மிஸ்டு கால் என பல்வேறு முறைகளில் முயன்றும் பதிவு செய்ய முடியவில்லை என பொதுமக்கள் புகார் தெரி



வித்துவருகின்றனர். வணிக சமையல் காஸ் கிடைக்காததால், பல ஓட்டல்கள் மூடப்பட்டன. இதனால் சென்னையில் விறகு அடுப்புகளின் பயன்பாடு அதிகரித்திருப்பதால், அவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சென்னை பேசின் பாலம் அருகில் 24 மணி நேரமும் விறகு அடுப்புகள் செய்யப்பட்டு வருகின்றனர். தகடுகள், கம்பிகளை வெட்டி, வெல்டிங் செய்வது ஒரு இடத்திலும், அவற்றின் கூர்மையான பகுதிகளை நீக்குவது, பெயின்ட் அடிப்பது போன்ற தரத்தை கூட்டும் பணிகள் வெவ்வேறு இடங்களிலும் நடைபெறுகிறது. அதனால் வால்டாக்ஸ் சாலையில் கடந்த சில நாட்களாக விறகு அடுப்புகள் 3 சக்கர வண்டிகளில் ஏற்றிச் சென்றவண்ணம் உள்ளது.

இது தொடர்பாக பேசின் பாலம் அருகில், கூட்ஸ் ஷெட் சாலையில் இயங்கி வரும் காஸ் மற்றும் விறகு அடுப்பு உற்பத்தி தொழிற்சாலை பணியாளர்களிடம் கேட்டபோது, "இதற்கு முன்பு காஸ் அடுப்புகளை தான் அதிகமாக செய்வோம்.

நாளொன்றுக்கு 3 விறகு அடுப்புகள்வரை செய்வோம். இப்போது விறகு அடுப்பு ஆர்டர் அதிகரித் திருப்பதால், காஸ் அடுப்புகள் செய்வதை நிறுத்திவிட்டோம். நாளொன்றுக்கு 15 விறகு அடுப்புகளை செய்கிறோம்.

இதற்கான மூலப்பொருட்களான இரும்பு பிளேட் மற்றும் எல் வடிவ கம்பிகள் தேவை அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆனால் எங்கள் செய்கூலி உயரவில்லை" என்றனர்.

## அரசியல் கார்னர்

### விரைவில் வெளியாகிறது முக்கிய அறிவிப்பு? - தவெக நிர்வாகிகளுடன் விஜய் தீவிர ஆலோசனை

**சென்னை, மார்ச்.18:** டெல்லியில் இருந்து நேற்று சென்னை திரும்பிய தவெக தலைவர் விஜய், கட்சியின் உயர் மட்ட நிர்வாகிளுடன் தீவிர ஆலோசனை நடத்தினார்.



தேஜ கூட்டணியில் தவெக இணையப்போவதாக எழும் யூகங்களுக்கு மத்தியில் விஜய் விரைவில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகிஉள்ளன.

சமீபத்தில் தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் நடத்திய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்கு பிறகே கூட்டணி குறித்த பரபரப்பு தொற்றிக்கொண்டது. கூட்டணி குறித்த தகவல்கள் கசிந்தது தொடர்பாக, ஆனந்தை விஜய் கண்டித்ததாகக் கூறப்படுகிறது.

இதற்குப் பின்னணியில் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா இடையிலான அதிகாரப் போட்டி நிலவுவதே காரணம் என தெரிகிறது.

இதற்கிடையில், அமித்ஷா தரப்பிலிருந்து கூட்டணி அழைப்பு வந்தாலும், அதை தவிர்க்கவே 90 இடங்கள், இரண்டரை ஆண்டு முதல்வர் பதவி என்ற நிபந்தனையை விஜய் விதித்ததாக கூறப்படுகிறது.

சமீபத்திய சிபிஐ விசாரணையின் போது அரசியல் அழுத்தம் இன்றி, கரூர் விவகாரம் குறித்து மட்டும் விசாரணை நடந்ததால் விஜய் உற்சாகமாக திரும்பிஉள்ளார்.

இந்நிலையில் நேற்று இரவு ஆதவ் அர்ஜுனா அலுவலகத்தில் நடந்த ஆலோசனையில் பங்கேற்ற விஜய், நிர்வாகிகளுக்கு இடையே நிலவும் மோதலைச் சமாதானம் செய்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, தேர்தல் வியூகம் மற்றும் கூட்டணி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக தவெக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே தவெக இணை பொதுச் செயலாளர் சிடிஆர். நிர்மல் குமார் நேற்று தனது எக்ஸ் தள பதிவில், 'பாஜக -அதிமுக, ராமதாஸ், சசிகலா ஆகியோரை தவெகவுடன் தொடர்புபடுத்தி கூட்டணிப் பேச்சு வார்த்தை நடத்தப்படுவதாக கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் எந்த விதமான பேச்சுவார்த்தை எந்த மட்டத்திலும் நடைபெறவில்லை.

பேச்சுவார்த்தை நடப்பதாக கூறப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம். பொதுமக்களிடமும் தொண்டர்களிடமும் குழப்பத்தை விளைவிப்பதற்காக இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் திமுகவினரால் பரப்பப்படுகின்றன' என்று தெரிவித்துள்ளார்.

### அறிவாலயம் செல்லும் தபால்காரருக்கு கூட ஒரு சீட்: அண்ணாமலை கிண்டல்




**சென்னை, மார்ச்.18:** திமுக கூட்டணியில், அறிவாலயம் செல்லும் தபால்காரருக்கு கூட ஒரு சீட் வழங்கி விடுகின்றனர் என பாஜ முன்னாள் மாநிலத்தலைவர் அண்ணாமலை கிண்டலடித்துள்ளார்.

கரூர் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்ற பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியது: தேர்தல் அறிவிப்பை தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் அட்டூழியம், அராஜகம் முடிவுக்கு வந்துள்ளது. ஒரு தலைபட்சமாக செயல்பட்டு கஞ்சா உள்ளிட்ட பொய்வழக்குகளை எதிர்க்கட்சியினர் மீது போட்டு வந்தனர். பாஜக தொண்டர்களுக்கு தொல்லை கொடுத்து வந்தனர்.

மக்கள் கொந்தளிப்பில் உள்ளனர். கரூருக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி வந்தவர் புழல் சிறையில் 400 நாட்களுக்கு மேல் இருந்துள்ளார். டிரான்ஸ்பார்மர் வழக்கு நாளை (இன்று) நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. கரூர் மக்களுக்கு எம்எல்ஏ நடவடிக்கை தலைகுனிவை ஏற்படுத்தி வருகிறது.

கரூரில் நடுநிலையான நடவடிக்கைகள் கிடையாது என்பதால் மாவட்ட ஆட்சியர், எஸ்.பி.யை மாற்றவேண்டும். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நடந்தது போல கரூரில் 60 முதல் 70 இடங்களில் மக்களை பட்டியில் அடைப்பதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளனர். இதுகுறித்து அதிமுக, பாஜக சார்பில் தேர்தல் ஆணையத்துக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி ஒற்றுமையாக வலிமையாக உள்ளது. திமுக கூட்டணியில், அறிவாலயம் செல்லும் தபால்காரருக்கு கூட ஒரு சீட் வழங்கி விடுகின்றனர். திமுக தோல்வி பயத்தில் உள்ளது. ராகுல் காந்தி இதுவரை ஒரு முறை கூட தமிழகம் வரவில்லை.

கரூரில் தவெக பிரச்சார கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளதால், முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி பதற்றமாக இருக்கிறார். அண்மையில் வெளியான கருத்து கணிப்பில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கை மேலும் உயரும்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில்அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், பாஜக மாவட்டத்தலைவர் வி.வி.செந்தில்நாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இதனிடையே, மாவட்ட எஸ்.பி.யை மாற்ற வேண்டும் என்று அண்ணாமலை வலியுறுத்திய நிலையில், கரூர் மாவட்ட எஸ்.பி . ஜோஸ் தங்கையா நேற்று மாற்றப்பட்டார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM